REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

E Paper

மின்னிதழ்

2023 டிசம்பர் 23 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

තිනකරන්

வரு. 91 இல. 304 | Saturday 23, December, 2023 | 11 பக்கங்கள் | 50/-


## தினகரன் வாரமஞ்சரி

### 24ஆம் திகதி பத்திரிகையுடன் வர்த்தமானி வெளிவராது

பிரதி ஞாயிறு தோறும் தினகரன் வாரமஞ்சரியுடன் இலவசமாக வெளிவரும் அரசவர்த்தமானி, எதிர்வரும் 24 ஞாயிற்றுக்கிழமை தினகரன் வாரமஞ்சரியுடன் வெளிவராது என்பதை வாசகர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம். 06

02 மாகாண பிரதம செயலாளர்களுடன்

## 10 அமைச்சுகளுக்கான செயலர்கள் ஜனாதிபதியால் நேற்று நியமனம்

பத்து அமைச்சுகளுக்கான புதிய செயலாளர்களையும் இரண்டு மாகாணங்களுக்கான பிரதம செயலாளர்களையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று நியமித்துள்ளார்.

இந்த நியமனங்கள் 2024ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் வழங்கப்பட்டுள்ளது.

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளராக ஏ.சி.மொஹமட் நஃபீல், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் மாகாண அலுவல்கள் அமைச்சின் செயலாளராக பி.பி.யசரத்ன, நீர்ப்பாசன அமைச்சின் செயலாளராக சமன் தர்ஷன பாடிகோராள ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கல்வி அமைச்சின் செயலாளராக வசந்தா பெரேரா, நீதி, சிறைச்சாலை விவகாரம் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளராக என்.எம்.ரணசிங்க, வனஜீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சின் 06

விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தில்

## வெற்றிகரமான பிரதிபலன்களை பெற வழிகாட்டப்பட வேண்டும்

ஜனாதிபதியின் செயலாளர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்



இதுவரை இருந்த விவசாய வேலைத்திட்டங்களை போன்று இடைநடுவில் நிறுத்தாது, விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி, பிரதிபலன்களை காண்பிக்கத் தேவையான வழிகாட்டுதல்களை வழங்குமாறு உரிய அதிகாரிகளுக்கு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகளை துறைசார் 06

நேபாளம் - இலங்கைக்கிடையே

## சுற்றுலா, கல்வித்துறை, முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பில் பேச்சு

நேபாள வெளிவிவகார அமைச்சருடன் அமைச்சர் அலி சப்ரி சந்திப்பு



இலங்கைக்கும் நேபாளத்துக்குமிடையிலான வர்த்தகம், கல்வித்துறை, சுற்றுலாத்துறை, முதலீட்டு வாய்ப்புகள் குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சருக்கும் நேபாள வெளிவிவகார அமைச்சருக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் காத்மண்டுவில் நடைபெற்றன.

நேபாள வெளிவிவகார அமைச்சர் என்.பி.சௌத் மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் தலைமையில் நேபாள-இலங்கை கூட்டு ஆணைக்குழு கூட்டம் நேற்று முன்தினம் (21) 06

## அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலை அருகே திடீர் சுற்றிவளைப்பு

# கைதிகளுக்கு போதைப்பொருள் எடுத்துச் சென்ற அதிகாரிகள் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்குள் போதைப்பொருள், கையடக்கத் தொலைபேசி உள்ளிட்ட பொருட்களை எடுத்துச் செல்ல முயன்ற சிறைச்சாலை அதிகாரிகள் இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலையின் பிரதான வாயிலின் அருகாமையில் பொலிஸார், பொலிஸ் விசேட செயலணி மற்றும் இராணுவத்தினரும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சிறைச்சாலைக்குள் போதைப்பொருள், சிகரெட், பீடி மற்றும் கையடக்கத் தொலைபேசி ஆகியவற்றை எடுத்துச் செல்ல முற்பட்ட போதே மேற்படி சிறைச்சாலை அதிகாரிகள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேற்படி சிறைச்சாலையில் பணிபுரியும் சிறைச்சாலை தொழில் ஆலோசகர் மற்றும் சிறைச்சாலையின் கட்டுப்பாட்டாளருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி இருவரும் இப்பொருட்களுடன் சிறைச்சாலைக்குள் பிரவேசிப்பதற்கு முயற்சித்த போது அவர்களை சோதனையிட்ட போதே அந்த பொருட்கள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறைச்சாலை தொழில் ஆலோசகர் மறைத்து வைத்திருந்த ஐஸ் 06

**கையடக்க தொலைபேசி, சிகரெட், பீடி மறைத்து எடுத்துச் செல்ல முயன்ற போதே இரு அதிகாரிகளும் கைதாகினர்**

புதிய இந்திய உயர்ஸ்தானிகர்

## சந்தோஷ் ஜா, ஜனாதிபதியிடம் நற்சான்றுப்பத்திரம் கையளிப்பு



இலங்கைக்கான புதிய இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா நேற்று (22) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நற்சான்றுப்பத்திரத்தை கையளித்தார். இந்த நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. 2019ஆம் ஆண்டு ஜூலை முதல் 2020ஆம் ஆண்டு ஜூலைவரை உஸ்பெகிஸ்தானில் இந்தியத் தூதராக சந்தோஷ் ஜா பணியாற்றினார். 06

வடக்கு, கிழக்கு தமிழ் கட்சிகள்

## ஜனாதிபதியுடனான சந்திப்புகளை பயனுள்ளதாக்கிக் கொள்ள வேண்டும்



வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதியுடனான சந்திப்புகளை பயனுள்ள விதத்தில் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகளுக்கும் இடையிலான சந்திப்பு தொடர்பாக அவரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதியுடன் தமிழ்க் கட்சிகள் மூன்றுக்கும் மேற்பட்ட சந்திப்புகளை மேற்கொண்டுள்ளன. சந்திப்புகள் பல விடயங்களுக்கு தீர்வுகளை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

குறிப்பாக இந்த சந்திப்பில் வலி. வடக்கு காணிகள் விடுவிப்பது, மாகாண சபை நேரடி நிதிகளை பெறும் 06

இலங்கைக்கு 24 வகையான

## அத்தியாவசிய மருந்துகளை பங்களாதேஷ் கையளிப்பு

03 மாதங்களுக்கான தேவையை பூர்த்தி செய்யும்



சுமார் 03 மாதங்களுக்கான தேவையை பூர்த்தி செய்யும் வகையில் பங்களாதேஷ் நன்கொடையாக வழங்கிய 01 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான 24 வகையான அத்தியாவசிய மருந்துகள் நேற்று முன்தினம் (21) 06

தரமற்ற மருந்து இறக்குமதி விவகாரம்

## உறுதியான ஆதாரங்கள் இருப்பின் எவர் மீதும் நடவடிக்கை



தரமற்ற மருந்து இறக்குமதி செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையதாக உறுதியான ஆதாரங்கள் இருந்தால் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல கைது செய்யப்படுவாரென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார். முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவை கைது செய்யாமை தொடர்பான குற்றச்சாட்டு தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அமைச்சரை கைது செய்ய வேண்டுமென ஊடகங்களும் அரசியல் 06



03 சுற்றாடலுக்கு ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும் **தீர்மானமிக்க பொறுப்பு இளம் சமூகத்தினரை சார்ந்துள்ளது**

03 இலங்கை மின்சார சபையின் **நாரம்மல வாடிக்கையாளர்களுக்கு e-Bill சேவை 01ஆம் திகதி ஆரம்பம்**



03 '200 இல் மலையகம் மாற்றத்தை நோக்கி' **மலையக மக்களின் சாதனைகள், தியாகங்களை நினைவுகூரும் நிகழ்வு**

'யுக்திய' போதைப்பொருள் சுற்றிவளைப்பு

## மாணவர்களை இலக்கு வைத்த 4,000 வர்த்தகர் இதுவரை கைது



நாட்டிலிருந்து போதைப்பொருளை முற்றாக ஒழிக்கும் வேலைத்திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை கைது செய்யப்பட்டவர்களில் 4 ஆயிரம் பேர், பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருளை விற்பனை செய்துள்ளதாக, பதில் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார். 06

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு

## மலேசியாவிலிருந்து புதிய விமானம் கொள்வனவு



ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு மலேசியாவிலிருந்து குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட Airbus ஏ. 320 ரக விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையில் 4RABS தொடர் 06

## கிழக்கு முன்னாள் முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் காலமானார்

**கிண்ணியா மத்திய நிருபர்**



கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் நேற்று (22) அதிகாலை கொழும்பில் காலமானார். சிறிது காலம் சிறுநீரக நோயினால் 06

## கொவிட்–19 காலத்தில் ஆரம்பித்த itukama.lk முழுமையாக நிறுத்தம்

ஜனாதிபதி செயலகம் தீர்மானம்

கொவிட் 19 தொற்று பரவல் காலத்தில் அறிவுறுத்தல்களை வழங்குதல் மற்றும் நிதி சேகரிப்புக்காக பயன்படுத்தப்பட்ட itukama.lk என்ற இணையத்தளத்தை தொடர்ந்தும் பயன்படுத்தாமல் இருப்பதற்கு ஜனாதிபதி செயலகம் தீர்மானித்துள்ளது.

கொவிட் தொற்று பரவலை கட்டுப்படுத்திய பின்னர் இணையத்தளம் மூலம் நிதியத்துக்கு கிடைத்த 06

12 கோடி ரூபா பெறுமதியான

## 05 Kg தங்கநகைகளுடன் இந்திய பெண்; விமான நிலையத்தில் கைது



பன்னிரெண்டு கோடி ரூபா பெறுமதியான 5 கிலோ 500 கிராம் நிறையுடைய தங்கநகைகளை சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டு வந்த குற்றச்சாட்டில் இந்தியப் பெண் ஒருவர் 06

## முல்லைத்தீவில் கன மழையால் 2,327 குடும்பங்கள் பாதிப்பு

முகாம்களிலிருந்தவர்கள் வீடு திரும்பினர்

**மாங்குளம் குறூப் நிருபர்**



முல்லைத்தீவு மாவட்டத்தில் பெய்துவந்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் 2,327 குடும்பங்களை சேர்ந்த 6,916 பேர் பாதிக்கப்பட்டதுடன், 412 குடும்பங்களை 06

# சர்வதேச செய்திகள்

## செக் குடியரசில் மாணவன் 14 பேரை சுட்டு, தற்கொலை



செக் குடியரசில் உள்ள சார்ல்ஸ் பல்கலையில் 24 வயது மாணவர் ஒருவர் 14 பேரைச் சுட்டுக் கொன்றுள்ளார். பின்னர் அவர் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த வியாழனன்று (21) நடந்த இந்த சம்பவத்தில் 25 பேர் காயமடைந்தனர். அவர்களில் 10 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் செக் குடியரசில் நடந்த மிக மோசமான துப்பாக்கிச்சூட்டுச் சம்பவமாக அது கருதப்படுகிறது. சுட்டுக்கொல்லப்பட்டவர்களில் சிலர் அந்த மாணவரின் சகாக்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவத்திற்கு இன்று (23) தேசிய அளவில் துக்கம் அனுசரிக்கப்படவுள்ளது. அரசாங்கக் கட்டடங்களில் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்கவிடப்படும். கொல்லப்பட்ட மாணவர்களின் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு முன்னர் அந்த மாணவர் தமது தந்தையைச் சுட்டுக்கொன்றதாக பொலிஸார் நம்புகின்றனர்.

துப்பாக்கிச் சூட்டை அடுத்து அந்த நகரில் உள்ளவர்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டாம் என்று பொலிஸார் அறிவுறுத்தினர். ஆயுதங்கள் ஏந்திய பொலிஸார் காவல் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

சம்பவம் நடந்த இடத்துக்கு அருகில் 14ஆம் நூற்றாண்டின் சார்ல்ஸ் பாலம் உள்ளிட்ட முக்கிய சுற்றுலாத்தலங்கள் உள்ளன.

## ஒபெக் அமைப்பிலிருந்து விலக அங்கோலா முடிவு



உற்பத்தியின் அளவு பற்றிய முரண்பாடு காரணமாக எண்ணெய் உற்பத்தி அமைப்பான ஒபெக்கில் இருந்து அங்கோலா விலகியுள்ளது.

சர்வதேச சந்தையில் எண்ணெய் விலையை அதிகரிப்பதற்கு 2024 இல் எண்ணெய் உற்பத்தியை மேலும் குறைக்க ஒபெக்கின் 13 அங்கத்துவ நாடுகள் மற்றும் அதன் 10 கூட்டணி நாடுகள் கடந்த மாதம் தீர்மானித்தன.

அங்கோலா தற்போது நாளொன்றுக்கு சுமார் 1.1 மில்லியன் பீப்பாய் எண்ணெய் உற்பத்தி செய்வதோடு ஒட்டுமொத்த ஒபெக் நாடுகளும் 30 மில்லியன் பீப்பாய்களை உற்பத்தி செய்கின்றன.

அங்கோலாவின் இந்த அறிவிப்பை அடுத்து மசகு எண்ணெய் விலை 1.5 வீதத்திற்கு மேல் வீழ்ச்சி கண்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை (21) இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின்போதே அங்கோலா ஒபெக்கில் இருந்து விலகும் முடிவை எடுத்துள்ளது. "இந்த அமைப்பில் தொடர்ந்து இருப்பதால் எந்த லாபமும் இல்லை என்று நாம் கருதுகிறோம். எமது நலனை கருதி நாம் வெளியேறுவதற்கு தீர்மானித்துள்ளோம்" என்று அங்கோலா கனிம வளங்கள் மற்றும் பெற்றோலிய அமைச்சர் டயமன்டீனோ அசவேடோ தெரிவித்துள்ளார்.

துணை சஹாரா ஆபிரிக்காவில் மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தி நாடுகளாக அங்கோலா மற்றும் நைஜீரியா உள்ளன.

## ஆப்கான் பிரஜைகள் பெற்றுள்ள பாக். கடவுச்சீட்டுகள் முடக்கம்



பாகிஸ்தான் தலிபான்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஆப்கானிய பிரஜைகளுக்கு வழங்கப்பட்டுள்ள பாகிஸ்தான் கடவுச்சீட்டுகள் முடக்கப்பட்டுள்ளதாக அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் பாகிஸ்தானிலுள்ள ஆப்கானிய பிரஜைகள் பெற்று இருக்கும் 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் வரையான கடவுச்சீட்டுகள் இரத்து செய்யப்பட்டுள்ளன. அத்தோடு பாகிஸ்தானில் தங்கியிருப்பதற்கான சட்டபூர்வ ஆவணங்களை கொண்டிராத ஆப்கானியரை திருப்பி அனுப்பும் நடவடிக்கையும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் கடவுச்சீட்டு பெற்ற ஆப்கானியர்களில் ஒருவராக கருதப்படும் ஆப்கானிஸ்தானின் ஹக்கானி வலையமைப்பின் தலைவரும் தலிபான் அரசின் உள்துறை அமைச்சருமான சிராஜுத்தீன் ஹக்கானிக்கு கடவுச்சீட்டு வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் சிந்து மாகாணத்தின் சுக்கூரில் இரண்டு அலுவலர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் ஓய்வு பெற்றவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹக்கானி பாகிஸ்தான் கடவுச்சீட்டு வைத்திருப்பதாகவும் வெளிநாடுகளுக்கு பயணங்கள் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுவதை ஆப்கானிய தலிபான் அதிகாரிகள் நிராகரித்துள்ளனர்.

தலிபான்கள் ஆப்கானில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முன்பிருந்தே அமெரிக்காவின் உலக பயங்கரவாதிகளின் பட்டியலில் ஹக்கானியின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதனால் தாம் கைது செய்யப்பட்டு அமெரிக்காவுக்கு ஒப்படைக்கப்படுவதைத் தவிர்க்கும் வகையில் அவர் வெளிநாட்டு பயணங்களை தவிர்த்துக் கொண்டுள்ளார்.

# காசாவில் 'பஞ்ச அபாயம்' குறித்து ஐ.நா எச்சரிக்கை



## இஸ்ரேலின் தாக்குதல்களால் 48 மணி நேரத்தில் 400 பேர் வரை பலி

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான போர் காரணமாக காசா பகுதி பஞ்சத்தை நோக்கிச் செல்வதாக ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது. எனினும் உதவிகளை அதிகரிக்கும் பாதுகாப்புச் சபை தீர்மானம் பெரும் இழுபறிக்குப் பின் அமெரிக்க நேரப்படி நேற்று வாக்கெடுப்புக்கு விடப்படவிருந்தது. ஆனால் போர் நிறுத்தம் ஒன்றை இந்தத் தீர்மானம் வலியுறுத்தவில்லை.

மறுபுறம் காசாவில் இதுவரை இல்லாத மோசமான போராக மாறி இருக்கும் இந்தப் போரை நிறுத்துவதற்கான இராஜதந்திர முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஐக்கிய அரபு இராச்சியத்தினால் கொண்டுவரப்பட்ட நகல் தீர்மானத்தின் மீது கடந்த திங்கட்கிழமை வாக்கெடுப்பு நடத்தவிருந்த நிலையில் தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டு நேற்று வாக்கெடுப்புக்கு விடப்படவிருந்தது. ஆதரவாக வாக்களிப்பதாக அமெரிக்கா உறுதி அளித்திருக்கும் இந்தத் தீர்மானத்தில், மனிதாபிமான உதவிகள் செல்வதற்கு அவசர நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்பட்டபோதும், போரை உடன் முடிவுக்குக் கொண்டுவர வலியுறுத்தப்படவில்லை.



இந்தத் தீர்மானத்தில் "போர்நிறுத்தம்" என்ற சொற்பிரயோகத்தை பயன்படுத்த இஸ்ரேலின் நெருங்கிய கூட்டாளியான வீட்டோ அதிகாரம் பெற்ற அமெரிக்கா தொடர்ந்து எதிர்ப்பு வெளியிட்டு வந்தது. ஹமாஸ் ஒழிக்கப்படும் வரை காசாவில் போர் நிறுத்தம் இல்ல என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கடந்த புதன்கிழமை (20) கூறியிருந்தார்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி 1200 பேர் கொல்லப்பட்டு 240 பேர் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்ட இஸ்ரேல் மீதான பலஸ்தீன போராளிகளின் தாக்குதலை அடுத்து ஆரம்பமான இந்தப் போரில் இஸ்ரேலின் இடைவிடாத பயங்கரத் தாக்குதல்களால் காசா பகுதி பேரழிவை சந்தித்துள்ளது.

காசாவில் உயிரிழப்பு எண்ணிக்கை 20 ஆயிரத்தை தாண்டி இருப்பதோடு 6,000க்கும் அதிகமானவர்கள் காணமல்போயுள்ளனர். இவர்கள் இடிபாடுகளில் சிக்கி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

காசாவில் ஒட்டுமொத்த மக்களும் பஞ்சத்தை எதிர்கொள்ளும் அச்சுறுத்தலுக்கு முகம்கொடுத்துள்ளனர் என்று ஐ.நா ஆதரவு உலகளாவிய பட்டினி கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. அரை மில்லியனுக்கும் அதிகமானோர் "பேரழிவு நிலைமையை" சந்தித்துள்ளார்கள் என்று அது குறிப்பிட்டுள்ளது.

"இத்தகைய இழப்பு மற்றும் அழிவுடன், கடந்து செல்லும் ஒவ்வொரு நாளும் காசா மக்களுக்கு மேலும் பசி, நோய் மற்றும் விரக்தியை மட்டுமே கொண்டு வரும் என்று நாம் பல வாரங்களாகக் கூறி வருகிறோம்" என ஐ.நா மனிதாபிமான தலைவர் மார்டின் கிப்பித், எக்ஸ் சமூகதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அரை மில்லியன் பேர் பசியால் வாடுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. உலகின் மற்ற பகுதிகளுடன் ஒப்பிடுகையில் இது 4 மடங்கு அதிகம்.

பஞ்சத்தில் வாடும் பகுதியாக வகைப்படுத்த சில நிபந்தனைகள் உள்ளன. அவற்றுள் ஒன்று 20 வீதத்திற்கு அதிகமானோர் பட்டினியால் வாடுவது. கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடு, மரணங்களின் எண்ணிக்கையும் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

மனிதநேய அடிப்படையிலான சண்டை நிறுத்தம் இந்த நிலையை மாற்றக்கூடும் என்று உலக உணவுத் திட்டம் கூறுகிறது.



### தொடரும் உயிரிழப்புகள்

2.4 மில்லியன் மக்கள் தொகை கொண்ட குறுகிய நிலப்பகுதியான காசாவில் தற்போது 1.9 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்திருப்பதாக ஐ.நா தெரிவித்துள்ளது.

தமது வீடுகள் அழிக்கப்பட்டு நெரிசல் மிக்க முகாம்களில் தங்கி இருக்கும் மக்கள் உணவு, நீர், எரிபொருள் மற்றும் மருந்துகளை பெற போராடி வருகின்றனர். நோய்கள் பரவி வருவதோடு தொடர்பாடல்களும் அடிக்கடி துண்டிக்கப்பட்டு வருகின்றன.

இடம்பெயர்ந்து துயரங்களை அனுபவித்து வரும் காசா மக்கள் போர் நிறுத்தம் ஒன்றை கோரி வருகின்றனர். "இந்த அவலத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று கேட்கிறேன்" என ரபாவில் உள்ள பசுமையில்லம் ஒன்றில் அடைக்கலம் பெற்றிருக்கும் புவாத் அப்ராஹிம் வாதி தெரிவித்தார்.

"இந்தப் போர் அழிவைத் தவிர வேறு ஒன்றையும் செய்யவில்லை. இது போதும்" என்றார்.

பல வார அழுத்தத்திற்குப் பின்னரே இஸ்ரேல் காசாவுக்கு நேரடியாக உதவிகளை வழங்க முடியுமாக அதன் கெரம் ஷலோம் எல்லைக் கடவையை திறந்தது. ஏற்கனவே காசாவுடனான எகிப்து எல்லைக் கடலையான ரபா வழியாக மட்டுப்படுத்தப்பட்ட உதவிகள் சென்று வருகின்றன.

எனினும் இஸ்ரேல் கடந்த வியாழக்கிழமை இந்த கெரம் ஷலோம் எல்லையின் காசா பக்கமாக தாக்குதல் நடத்தியது. இதனை அடுத்து இந்த எல்லைப் பகுதியால் உதவிகள் செல்வதை உலக உணவுத் திட்டம் இடைநிறுத்தியது.

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்தும் அதே வேகத்துடன் நீடித்து வருகிறது.

ரபாவில் உள்ள குடியிருப்பு வீடுகள் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் நேற்று நடத்திய தாக்குதல்களில் எட்டு பொதுமக்கள் கொல்லப்படதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்தது. கான் யூனிஸில் நடத்திய தாக்குதலில் மேலும் ஆறு பொதுக்கள் கொல்லப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜபலியா அகதி முகாமில் இஸ்ரேல் நடத்தும் சரமாரி தாக்குதல்களில் கொல்லப்பட்ட தாய் மற்றும் ஐந்து மகள்கள் உட்பட ஒன்பது பேரின் சடலங்களை மீட்பாளர்கள் மற்றும் அம்புலன்ஸ் பணியாளர்கள் மீட்டுள்ளனர். ஜபலியா நகர் மற்றும் ஜபலியா அகதி முகாமில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் கடந்த 24 மணி நேரத்தில் சுமார் 30 பேர் கொல்லப்பட்டிருப்பதாக வபா செய்தி நிறுவனம் நேற்று தெரிவித்தது.

காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பு ஒன்றில் தொடர்பாடல்கள் தடைப்பட்ட சூழலிலும் கடந்த 48 மணி நேரத்தில் 390 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு 734 பேர் காயமடைந்திருப்பது உறுதி செய்யப்பட்டதாக தெரிவித்தது.

மறுபுறம் பலஸ்தீன போராளிகள் காசாவில் இருந்து டெல் அவிவை நோக்கி வியாழக்கிழமையும் ரொக்கெட் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். காசாவின் பல பகுதிகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததாக இஸ்ரேல் இராணுவம் கூறியிருக்கும் நிலையிலேயே இந்த தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

காசாவில் தொடர்ந்து எதிர்ப்பை சந்தித்து வரும் இஸ்ரேலிய இராணுவத்தின் மேலும் இரு வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். வடக்கு காசாவில் சிறப்பு மீட்பு தொழில்நுட்பப் பிரிவைச் சேர்ந்த 21 வயது லெப்டினன்ட் மற்றும் தெற்கு காசாவில் 7071 பொறியியல் படைப்பிரிவின் 31 வயது மேஜர் ஜெனரல் ஆகியோர் கொல்லப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இரு இஸ்ரேலிய படையினர் படுகாயத்திற்கு உள்ளாகியுள்ளனர். இதில் தெற்கு காசாவில் இடம்பெற்ற சண்டையில் இருவரும் வடக்கு காசாவில் ஒருவரும் காயமடைந்துள்ளதை இஸ்ரேல் இராணுவம் உறுதி செய்தது.

இதன்படி கடந்த புதன் மற்றும் வியாழக்கிழமைகளுக்கு இடையே நான்கு இஸ்ரேலிய துருப்புகள் கொல்லப்பட்டிருப்பதோடு காசா மீது தரைவழி தாக்குதலை ஆரம்பித்தது தொடக்கம் மொத்தம் 138 இஸ்ரேலிய படையினர் கொல்லப்பட்டிருப்பதாக இஸ்ரேலின் உத்தியோகபூர்வ தகவல்கள் அடிப்படையில் ஐ.நா தெரிவித்துள்ளது. தவிர காசாவில் மேலும் 770 வீரர்கள் காயமடைந்துள்ளனர்.

### முரண்பாடு நீடிப்பு

எகிப்து மற்றும் அமெரிக்காவின் ஆதரவோடு கட்டாரின் மத்தியஸ்தத்தில் கடந்த மாதம் ஒரு வார போர் நிறுத்தத்தை ஏற்படுத்த முடிந்தது. அதன்போது 80 இஸ்ரேலியர்கள் உட்பட 105 பணயக் கைதிகள் விடுவிக்கப்பட்டதோடு அதற்கு பகரமாக இஸ்ரேலிய சிறைகளில் உள்ள 240 பலஸ்தீனர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையில் பலஸ்தீன போராளிகளின் பிடியில் மேலும் 129 பணயக்கைதிகள் இருக்கும் நிலையில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே மற்றொரு போர் நிறுத்தத்திற்கான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. ஹமாஸ் அமைப்பின் தலைவர் எகிப்து சென்று பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதோடு இதனையொட்டி ஐரோப்பாவிலும் சந்திப்புகள் இடம்பெற்றன.

எவ்வாறானும் இஸ்ரேல் மற்றும் ஹமாஸின் நிலைப்பாடுகளில் பெரும் முரண்பாடு நீடித்து வருகிறது.

இஸ்ரேல் தம்மை அழிக்க நினைப்பது பெரும் தோல்வியில் முடியும் என்றும் மேலும் பணயக் கைதிகளை விடுவிப்பது போர் நிறுத்தம் ஒன்றிலேயே தங்கியுள்ளது என்று ஹமாஸ் ஆயுதப் பிரிவு தெரிவித்துள்ளது.

பணயக்கைதிகளை விடுவிக்க ஹமாஸுக்கு இராணுவ நெருக்கடி கொடுத்து மீட்பு நடவடிக்கையை மேற்கொள்வது சிறந்த வழியாக இருக்கும் என்று இஸ்ரேல் திட்டமிடுகிறது.

ஆனால் அந்த அணுகுமுறை இதுவரை அவ்வளவாக எதிர்பார்த்த பலனைக் கொடுக்கவில்லை. அந்த அணுகுமுறையின் கீழ் இதுவரை ஒரு பிணையாளி மட்டுமே மீட்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் போர் பிராந்தியம் எங்கும் பரவும் அச்சம் நீடித்து வருகிறது. லெபனான் எல்லையில் இஸ்ரேல் இராணுவம் மற்றும் ஹிஸ்புல்லா போராளிகள் இடையே தொடர்ந்து மோதல் இடம்பெற்று வருவதோடு யெமனின் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் பலஸ்தீனத்திற்கு ஆதரவாக செங்கடலில் செல்லும் கப்பல்கள் மீது தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 டிசம்பர் 23 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்

| | |
|---|---|
| சுபஹ் | 04.56 |
| லுஹர் | 12.11 |
| அஸர் | 03.32 |
| மஃரிப் | 06.02 |
| இஷா | 07.17 |

இன்றைய சுபதினம்

சோபகிருது வருடம் மார்கழி 08

| | | | |
|---|---|---|---|
| ராகுகாலம் | பகல் | 1.30 - 3.00வரை | |
| சுபநேரம் | காலை | 10.30 - 12.00வரை | |

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி





பத்து அமைச்சுகளுக்காக நேற்று (22) நியமிக்கப்பட்ட புதிய செயலாளர்கள் 10 பேர் மற்றும் இரண்டு மாகாணங்களுக்கான பிரதம செயலாளர்கள் ஆகியோர் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுடன் எடுத்துக்கொண்ட புகைப்படம்.

வவுனியாவில்

## ஹெரோயினுடன் மூவர் கைது

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியாவில் 16 கிராம் ஹெரோயினுடன் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பெண் சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

பதில் பொலிஸ் மாஅதிபரின் உத்தரவுக்கமைய நாடளாவிய ரீதியில் விசேட அதிரடிப்படையினரும் பொலிஸாரும் இணைந்து விசேட போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

06

சுற்றாடலுக்கு ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும்

# தீர்மானமிக்க பொறுப்பு இளம் சமூகத்தினரை சார்ந்துள்ளது

சுற்றாடலுக்கு ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும் தீர்மானமிக்க பொறுப்புகள் இளம் சமூகத்தினரை சார்ந்துள்ளதென தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

உலகளாவிய காலநிலை அனர்த்தங்களை மட்டுப்படுத்துவதற்காக இலங்கை முன்னின்று செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய அவர், சுற்றாடலுக்காக இளம் சமூகத்தினரின் அர்ப்பணிப்புகளையும் பாராட்டினார்.

இளம் தலைவர்களை பாராட்டுவதற்காக ஜனாதிபதி செயலகத்தில் கடந்த புதன் (20) நடைபெற்ற நிகழ்விலேயே தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இந் நிகழ்வானது பல்வேறு துறைகளிலும் திறமைகளை வெளிப்படுத்திய இளம் தலைவர்கள் பாராட்டுவதற்காக லியோ கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதற்கமைய தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் மாணவத் தலைவர்கள் மற்றும் உப மாணவத் தலைவர்கள், சர்வதேச லியோ கழகத்தின் தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளின் திறமைகளும் பாராட்டப்பட்டன.

இங்கு சிறப்புரை ஆற்றிய சாகல ரத்நாயக்க, "சமூக பணிகளின் போது இளம் சமூகத்தினரின் பங்களிப்பு முன்னைய காலம் தொடக்கம் தற்காலம் வரையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சுற்றாடலுக்கு ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும் போது இளம் சமூகத்தினரை சார்ந்திருக்கும் பொறுப்புகள் தொடர்பில் அறிவுறுத்திய அவர், தற்காலத்தில் சுற்றாடலுக்கான இளைஞர்களின் அர்ப்பணிப்பையும் பாராட்டினார்.

அத்தோடு உலகளாவிய காலநிலை அனர்த்தங்களை மட்டுப்படுத்துவதற்காக இலங்கை முன்னின்று செயற்பட வேண்டியது அவசியமெனவும் வலியுறுத்தினார்.

மீள்புதுப்பிக்கத் தக்க வலுசக்தி துறைக்குள் இலங்கையின் கொள்ளளவு தொடர்பில் சுட்டிகாட்டிய அவர், பசுமை மற்றும் நவீன பொருளாதாரத்திற்கான ஜனாதிபதியின் தெரிவு தொடர்பிலும் விளக்கமளித்தார்.

நெருக்கடி நிலையிலிருந்து மீள எழுவதற்கான முயற்சிகளின் போது முகங்கொடுக்க நேர்ந்த சவால்களைப் போன்று நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அதரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றும் தெரிவித்தார்.

06

முன்னாள் முதலமைச்சர்

## நஜீப் அப்துல் மஜீத்தின் மறைவு அரசியலில் பாரிய இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது



நாடறிந்த அரசியல்வாதியும் முதலாவது முஸ்லிம் முதலமைச்சருமான நஜீப் ஏ.மஜீத்தின் மறைவு அரசியலில் பாரிய இடைவெளியை ஏற்படுத்தியுள்ளதாக, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

இவரது மறைவையிட்டு வெளியிட்ட அனுதாபச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அச்செய்தியில் அவர் மேலும் தெரிவித்தாவது,

"நாகரீக அரசியலின் நாயகன் மர்ஹூம் நஜீப் ஏ.மஜீத். சிறந்த அரசியல் புலத்தில் புடம்போடப்பட்ட இவரிடம் ஆழ்ந்த அனுபவங்கள் இருந்ததுடன், தந்தை அப்துல் மஜீத்தின் பாசறையே அவரது ஆளுமையை முழுமைப்படுத்தியது. அவரது தந்தை மூதூர் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக நீண்டகாலம் இருந்து திருகோணமலைக்கு அளப்பரிய சேவைகளை செய்தார்.

எம்மோடு இணைந்து அரசியல் செய்த காலத்தில் அவரது ஆளுமையை நாம் அடையாளம் கண்டோம். இதனாலேயே கிழக்கு மாகாண முதலமைச்சராக நஜீப் ஏ.மஜீத்தை நியமிக்கும் முயற்சியில் எமது கட்சி ஈடுபாடு காட்டியது. தந்தையும் மகனும் இன, மத பேதமின்றி பணியாற்றியதாலேயே எல்லோராலும் விரும்பப்பட்டனர்.

எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாரது நற்செயல்களை பொருந்திக் கொள்ளப் பிரார்த்திக்கிறேன்" எனத் தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையின்

## நாரம்மல வாடிக்கையாளர்களுக்கு e–Bill சேவை 01ஆம் திகதி ஆரம்பம்

இலங்கை மின்சார சபையின் eBill சேவை நாரம்மல வாடிக்கையாளர்களுக்கு ஜனவரி 01ஆம் திகதி முதல் அறிமுகப்படுத்தப்படுவதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

06

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD



'200 இல் மலையகம் மாற்றத்தை நோக்கி'

## மலையக மக்களின் சாதனைகள், தியாகங்களை நினைவுகூரும் நிகழ்வு

நாளை ஞாயிறு நுவரெலியா நகரில் விழா

**நுவரெலியா தினகரன் நிருபர்**

'200 இல் மலையகம் மாற்றத்தை நோக்கி' எனும் தொனிப்பொருளின் கீழ் மலையக மக்களின் சாதனைகளை வெளிபடுத்தியும் மலையக தியாகிகளை நினைவுகூர்ந்தும் நிகழ்வொன்று நாளை (24) நுவரெலியாவில் நடைபெறவுள்ளது.

நாளை காலை 9.00 மணிக்கு நுவரெலியா நகரில் ரீகல் திரையரங்குக்கு முன்பாக ஆரம்பமாகும் ஊர்வலம், சினிசிட்டா நகர மண்டபத்தை நோக்கிப் பயணிக்கும்.

இந்த ஊர்வலத்தின் போது, 5 ஊர்திகளின் பவனி நடைபெறவுள்ளது. இதில் மலையக மக்களை இலங்கைக்கு அழைத்து வந்த முதலாவது கப்பலான ஆதிலக்ஸ்மி கப்பல் வடிவமைக்கப்பட்டு ஊர்வலத்தில் இடம்பெறும்.

இதைத் தவிர, எமது மலையக மக்கள் வாழ்வு நிலைமை, படிப்படியாக பெற்றுக்கொண்ட வெற்றிகள் ஆகிய விடயங்களும் இந்த ஊர்வலத்தில் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன், வெள்ளைக்காரத்துறைமார் போன்ற வேடம் தரித்து குதிரையொன்றில் நபரொருவர் வருகை தருவார்.

பாடசாலை மாணவர்கள், அறநெறி பாடசாலை மாணவர்கள் தமது கைகளில் தேசியக் கொடியை ஏந்திய வண்ணம் நடைபவனியாக வருவர்.

மலையக மக்களின் கலை, கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் சிலம்பம், காவடிதப்பு, பறை போன்ற வாத்தியங்களை இசைத்தவாறு கலைஞர்கள் இதில் பங்கேற்பர்.

இந்த ஊர்வலமானது புதிய கடை வீதி வழியாக தர்மபால சுற்றுவட்டத்தை கடந்து, நுவரெலியா பதுளை வீதி வழியாக சினிசிட்டா நகர மண்டபத்தை அடையும். இதனை தொடர்ந்து மேடை நிகழ்வுகள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணித் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம அதிதியாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் கலந்து கொள்வார்.

06

## சிவனொளிபாத யாத்திரை; விசேட ரயில், பஸ் சேவை

அமைச்சர் பந்துலவின் வழிகாட்டலில் நேற்று முதல் ஆரம்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சிவனொளிபாதமலை யாத்திரை இம்மாதம் 26ஆம் திகதி பௌர்ணமி தினத்தோடு ஆரம்பமாவதையிட்டு விசேட பஸ் மற்றும் ரயில் சேவைகளை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், போக்குவரத்து ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தனவின் வழிகாட்டலின் கீழ் ரயில்வே திணைக்களம் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை ஆகியன உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

சிவனொளிபாதமலை யாத்திரையை கருத்திற்கொண்டு தற்போது நடைமுறையில் உள்ள ரயில் சேவைகளுக்கு மேலதிகமாக ரயில் சேவைகளை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிவனொளிபாதமலை யாத்திரை, பாடசாலை விடுமுறை மற்றும் பண்டிகைக்காலத்தையிட்டு யாத்திரைகளை மேற்கொள்வோர் மற்றும் பயணங்களை மேற்கொள்வோரின் நலன் கருதி நேற்று முதல் இந்த ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளைவரை, பதுளையிலிருந்து கொழும்பு கோட்டைவரை மற்றும் கண்டியிலிருந்து பதுளைக்கும் பதுளையிலிருந்து கண்டிக்கும் விசேட ரயில் சேவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.



சிவனொளிபாதமலை யாத்திரிகர்களின் நலன் கருதி ஹட்டன் ரயில் நிலையத்தில் பயணிகள் இளைப்பாறும் மண்டபம் வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஹட்டன் ரயில் நிலையத்திலிருந்து நல்லதண்ணி வரைக்கும் மற்றும் நல்லதண்ணியிலிருந்து ஹட்டன் ரயில் நிலையம் வரைக்கும் இலங்கை போக்குவரத்து சபை பஸ்கள் இணைந்த சேவையை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிவனொளிபாத யாத்திரிகர்களின் நலன் கருதி விசேட டிக்கெட் கருமபீடங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் நீண்ட விடுமுறை காலத்தை கருத்திற்கொண்டு வார இறுதி நாட்கள் மற்றும் விடுமுறை நாட்களில் தற்போது சேவையில் ஈடுபடுத்தப்படும் ரயிலுக்கு மேலதிகமாக ரயில் சேவைகளை நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

## இளைஞருடன் சென்ற இளம் யுவதி பாவற்குளத்தில் மூழ்கி மரணம்

**வவுனியா விசேட நிருபர்**

கடும் மழை காரணமாக வான் பாய்ந்துகொண்டிருக்கும் வவுனியாவிலுள்ள பாவற்குளத்தை பார்வையிட இளைஞருடன் சென்ற இளம் யுவதி ஒருவர் குளத்தினுள் விழுந்து நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளதாக உளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

பாவற்குளம் வான் பாய்வதை பார்வையிட அக்குளத்துக்கு இளைஞர் ஒருவருடன் இந்த யுவதி சென்றதுடன், பாவற்குளம் பகுதியில் நின்ற போது யுவதி நீரில் விழுந்துள்ளார். சிலர் உடனடியாக விரைந்து செயற்பட்டு யுவதியை மீட்டு, பாவற்குளம் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

எனினும் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் முன்னரே யுவதி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனையடுத்து யுவதியின் சடலம் வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.



வவுனியா, நாகர் இலுப்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய ஜன்சிகா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்று (22) மதியம் சடலத்தை பார்வையிட்ட வவுனியா பதில் நீதவான் தி.திருஅருள், சம்பவம் தொடர்பில் விசாரணையை மேற்கொண்டதுடன், யுவதி நீரில் மூழ்கியமையால் மரணம் சம்பவித்ததாக பதில் நீதவான் தெரிவித்தார். பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை பெற்றோரிடம் ஒப்படைக்க பதில் நீதவான் உத்தரவிட்டார்.

சம்பவம் தொடர்பில் உளுக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழில் சோதனை; 105 பேர் கைது

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தின் பல்வேறிடங்களில் கடந்த 4 நாட்களில் 105 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். யாழ். நகரில் 70 பேரும் காங்கேசன்துறையில் 32 பேரும் துன்னாலையில் 3 பெண்களும் கைது செய்யப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரால் முன்னெடுக்கப்படும் விசேட சோதனை நடவடிக்கையில் போதைப்பொருள் பாவனை, போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தமை, போதைப்பொருள் விற்பனை ஆகிய குற்றச்சாட்டுகளில் இச்சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

துன்னாலையில் கைதான 3 பெண்களிடமிருந்து பெருந்தொகை பணம், கையடக்க தொலைபேசி, போதைப்பொருள் ஆகியவை பொலிஸாரால் மீட்கப்பட்டன.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் மார்கழி மாதம் 08ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஆகிறா பிறை 08

## குறள் தரும் சிந்தனை

இகலென்ப எல்லா உயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய்

*மனமாறுபாடு காரணமாக ஏற்படுகிற பகையுணர்வு மக்களை ஒன்று சேர்ந்து வாழ முடியாமல் செய்கின்ற தீய பண்பாகும்.*

# இனஐக்கியம் உருவாகுவதை சீர்குலைக்கும் முயற்சிகள்!

இலங்கையில் சுமார் ஏழு தசாப்த காலமாகத் தொடர்ந்து வருகின்ற இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்டு வந்த முயற்சிகள் எதுவுமே வெற்றி கண்டதில்லை. அம்முயற்சிகள் அரைகுறை நிலையிலேயே கைகூடாமல் போயுள்ளன.

ஆங்கிலேய ஆட்சியாளர்களிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்றுக் கொண்டதன் பின்னர், வெவ்வேறு அரசியல் கட்சிகள் மாறிமாறி அரசாங்கங்களை அமைத்துள்ளன. அந்த அரசாங்கங்களால் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பலவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனாலும் அம்முயற்சிகள் இறுதியில் கைகூடவில்லை, இடைநடுவிலேயே குழம்பிப் போயுள்ளன.

புலிகள் இயக்கத்தின் முப்பது வருடகால ஆயுதப் போராட்டம் பாதுகாப்புப் படைகளால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. சமாதான முயற்சிகள் குழம்பிப் போனதால், இராணுவ வழியிலேயே புலிகளின் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. புலிகள் இயக்கத்தின் ஆயுதப் போராட்டம் முற்றாகவே முடிவுக்கு வந்து விட்டது.

இறுதிக்கட்ட மோதலின் போது உயிரிழந்த புலிகளைத் தவிர பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்த புலிகள் இயக்க உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்தில் இணைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இன்று சாதாரண மக்கள் போன்று வாழ்கின்றனர். இலங்கையில் இனிமேல் ஆயுதப் போராட்டமொன்று உருவாகுவதற்கான வாய்ப்பென்பது முற்றாகவே கிடையாது.

ஆனாலும் புலிகளின் ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு விட்டதென்பதற்காக இனப்பிரச்சினைக்கான நியாயமான தீர்வை அலட்சியப்படுத்தி ஒதுக்கிவிட முடியாது. ஏனெனில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வென்பது சிறுபான்மை மக்களுக்கானதாகும். அதுமாத்திரமன்றி, கடந்த சுமார் ஏழு தசாப்த காலமாக இழுபறி நிலையில் இருந்து வருகின்ற இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை எவ்வாறேனும் அடைந்து விடுவதுதான் நியாயமாகும். அவ்வாறு தீர்வைக் காண்பதன் மூலமே நாட்டில் நிரந்தரமான அமைதியையும், இனநல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முடியும்.

இந்த யதார்த்தத்தை சிறுபான்மையின மற்றும் பெரும்பான்மையின மக்களில் நியாயமாகச் சிந்திக்கக் கூடியவர்கள் உணர்ந்து கொண்டுள்ளனர். ஆனால் அரசியல்வாதிகளில் பலர் இதுபற்றி அக்கறை கொள்வதில்லை. நாட்டில் இனப்பிரச்சினையானது முடிவின்றித் தொடர வேண்டுமென்று அரசியல்வாதிகளில் ஒருதரப்பினர் விரும்புகின்றனர். பெரும்பான்மையினத்தில் மாத்திரமன்றி, சிறுபான்மையினத்திலும் இவ்வாறான அரசியல்வாதிகள் பலர் உள்ளதைக் காண முடிகின்றது.

மக்களைக் கொதிநிலையில் வைத்திருப்பதற்கு அவர்கள் விரும்புகின்றனர். அதன் மூலம் மக்களின் வாக்குகளை வசீகரித்துக் கொள்வதற்கு அவர்கள் திட்டமிடுகின்றனர். எனவே எக்காலமும் மக்கள் மத்தியில் இனமுரண்பாடுகளை விதைப்பதிலேயே அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இனமுரண்பாட்டை வளர்க்கும் வகையில் அவ்வாறான அரசியல்வாதிகள் அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர். எனவே மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை முன்னெடுப்பது இயலாத காரியமாக இருக்கின்றது.

தற்போதும் இனஐக்கியத்துக்கான முயற்சியொன்று அரசியலுக்கு அப்பால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்குலகின் புலம்பெயர் தேசங்களில் வாழ்கின்றவர்களில் ஒரு அமைப்பினர் இந்த முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். 'உலகத் தமிழர் பேரவை' என்ற அமைப்பைச் சேர்ந்த இவர்கள் இலங்கைப் பிரஜைகளாவர்.

இக்குழுவினர் இலங்கையைச் சேர்ந்த பௌத்த மகா சங்கத்தினரை நேபாளத்தில் சந்தித்து நீண்ட நேரம் மனம்விட்டுப் பேசி ஆலோசனைகளில் ஈடுபட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நேபாளத்தில் இருதரப்பினரும் இவ்வாறு இதயசுத்தியான கலந்துரையாடல்களில் ஈடுபட்டதன் பின்னரே ஐக்கியத்துக்கான முயற்சியொன்று தற்போது முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது.

இருதரப்பினரும் நேபாளத்தில் சந்தித்துக் கலந்துரையாடி மேற்கொண்ட இணக்கப்பாட்டுக்கு 'இமயமலைப் பிரகடனம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இப்பிரகடனத்தை அடிப்படையாக வைத்தே தற்போது இலங்கையில் இனநல்லிணக்கத்துக்கான முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இம்முயற்சியை மக்களது உள்ளத்தில் ஐக்கியத்தை விதைப்பதற்கான சிறந்த முயற்சியாக பலரும் கருதுகின்றனர்.

'உலகத் தமிழர் பேரவை' பிரதிநிதிகள் சமீபத்தில் மகாநாயக்க தேரர்களை சந்தித்துக் கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்தனர். நாட்டில் நிரந்தர ஐக்கியத்தை ஏற்படுத்துவதே தமது நோக்கமென்று அவர்கள் தெரிவித்துள்ளனர். பௌத்த மகாசங்கத்தினரும் கூட்டாக இணைந்து இவ்வாறான முயற்சியொன்றை மேற்கொள்வதால் இம்முயற்சி வெளிப்படைத்தன்மையானதென்று அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான ஐக்கிய முயற்சியொன்று தொடர்பான தகவல்கள் வெளிவந்ததும், வடக்கிலுள்ள தமிழ் அரசியல்வாதிகள் ஒருசிலர் உடனடியாகவே எதிரான கருத்துகளை வெளியிட்டிருந்ததைக் காண முடிந்தது. இம்முயற்சி தொடர்பான சரியான தகவல்களைத் தெரிந்து கொள்ளாத நிலையில், அந்த அரசியல்வாதிகள் முரண்பாடான கருத்துகளைத் தெரிவித்திருந்தனர்.

ஐக்கியத்துக்கான அனைத்து முயற்சிகளையும் எதிர்ப்பதென்பது அபத்தமாகும். அரசியலுக்காகவே அவர்கள் இவ்வாறு செயற்படுகின்றனரென்பது நன்றாகவே புரிகின்றது. ஆனாலும் நாட்டின் எதிர்கால நலன் கருதி அவ்வாறான அரசியல்வாதிகள் செயற்படுவதே நியாயமாகும்.

editor.tkn@lakehouse.lk

# பொ.கருணாகரமூர்த்தி எழுதிய பாய்மரத்தில் ஒரு பறவை நாவல்



எண்பதுகளில் இலங்கையிலிருந்து புகலிடம்தேடி மக்கள் குடிபெயர்ந்தபோது, அதற்கெதிராக மிகக் கடுமையான கண்டனங்கள் இலங்கையிலிருந்து எழுந்தன. புலப்பெயர்வு என்பதே இழிவானதாகக் கருதப்பட்டது.

'பிரச்சினைக்குப் பயந்து, பிறந்த நாட்டையும் வாழ்ந்த வீட்டையும் இனசனங்களையும் விட்டுப் பிறதேசம் ஓடும் காகக்கூட்டத்தைப் பற்றி நினைத்தால் நான் அடிக்கடி பச்சாதாபப்படுவதுண்டு' என்று டொமினிக் ஜீவா எழுதினார்.

'புலம்பெயர் எழுத்தாளர்களே! எங்கள் அவலங்களை உங்கள் இருப்புக்காகப் பயன்படுத்தாதீர்கள்' என்று செங்கைஆழியான் பிரகடனம் செய்தார்.

'பாரிஸ் விமான நிலையத்தில் வந்திறங்கும் அகதிகள் கூட்டத்தில் என்னைத் தேடாதே!' என்ற தொனியில் இன்னுமொருவர் கவி பாடினார்.

உண்மையாகவே உயிர் அச்சுறுத்தல் நிலவிய சூழலில் தாய்நாட்டைத் துறந்து போன ஒருவர், மிக நீண்ட காலமாகக் குற்ற உணர்விலேயே காலத்தைக்கடத்திக் கொண்டிருந்தார். இலங்கையில் உள்ள ஐரோப்பியத் தூதரகம் ஒன்றிற்குச் சென்று, ஒழுங்காய் ஆவணங்கள் சமர்ப்பித்து, விசா பெறமுடிந்த போர்க்காலக்கவி ஒன்று, தான் ஒருபோதும் அகதி அந்தஸ்து கோரப்போவதில்லை என்று அறிக்கையிட்டது.

எண்பதில் தொகைதொகையாக இலங்கைத் தமிழர்கள் லண்டனில் வந்து குவிந்தபோது, ஏற்கெனவே பிரித்தானியக் குடிகளாக உலா வந்த தமிழ்ப் பெருங்குடிகள், புதிதாக வந்திறங்கிய தமிழர்களை இழிவாக நோக்கினர்.

இங்கையிலிருந்து ஐரோப்பியச் சுற்றுலாவிற்கு வந்த எழுத்தாளர்கள், தங்களுக்குக் களத்தில் வேலை இருக்கிறது என்றும் தாங்கள் இங்கே நிற்கமுடியாது என்றும் கூறிச் சென்றனர்.


கனடா சென்ற ஈழத்து அரசியல் அவதானி ஒருவர் புலம்பெயர் சமூகம் என்ன செய்ய வேண்டும் என்று நல்லுரை நல்கியபின்னர், தனது தாயகக்கடமையைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கென மறுநாளே தான் தாயகம் செல்லவிருப்பதாக மேடையில் அறிவிப்புச் செய்தார்.

வெவ்வேறு வடிவங்களில் அகதி வாழ்வை இழித்தும், நிராகரித்தும் எழும் குரல்களே இவை. ஆனால், புலம்பெயர் தமிழ்ச் சமூகம் இன்று உலக அரங்கில் வலிமைமிக்க சமூகமாக வேர்பிடித்துள்ளது. இலங்கையில் ஒருபோதுமே கால்பதித்திராத இலங்கைத்தமிழ்ச் சமூகத்தின் இரண்டாம், மூன்றாம் தலைமுறையினர் உருவாகியுள்ளனர். தங்கள் வீட்டிற்கு வந்திருக்கும் விருந்தினர், தங்கள் தந்தையின் மொழிபேசுபவர் என்று அந்தப் பிள்ளைகள் அறிந்து வைத்திருக்கின்றனர்.

'சொற்றுணை வேதியன் சோதி வானவன்' என்ற தேவாரத்தை ஆங்கிலத்தில் எழுதி வைத்துப் பாடும் தலைமுறை இது.

லண்டனில் ஒரு பஸ் தரிப்பிடத்தில் இணுவிலுக்குப் போவதற்காக நின்று கொண்டிருந்த ஒரு முதியவரை அடையாளங்கண்டு, அவரைப் பத்திரமாக அவரது வீட்டிற்குக் கொண்டுபோய்ச் சேர்த்திருக்கிறார் ஒரு சமாரியன்.

தனது மண்ணிலேயே வேரூன்றியவர், ஆழ்ந்து வேரோடிய ஆலமரத்தைப் போன்றவர். அந்த இடத்தைவிட்டுப் பெயர்ந்ததும் அவர் தூசியாகிப் போகிறார். தங்கள் அரசியல் எல்லைக்குள் யாரும் வந்துவிடாமல்,



அரசு ஆயிரம் எல்லைத் தடுப்புகளைப் போட்டிருக்கும் நிலையில், அதனை மீறி அந்த நாட்டிற்குள் நுழைந்திருக்கும் கிரிமினல்தான் ஓர் அகதியானவன்.

இலங்கைலிருந்து புலம்பெயர்ந்து, வெளிநாடுகளில் அகதிகளாகப் பயணிக்கும் அவலங்கள் நம் நினவடுக்குகளில் இருந்து வெளியேறிக் கொண்டிருக்கின்றன. அந்தத் துயரவலிகளைச் சுமந்தவர்கள் அவற்றைப் பதிவு செய்யாமலே போய்விட்டார்கள். அகதி வாழ்வினை, முள்ளிவாய்க்கால் அவலங்களைப் புகைப்படங்களில் பார்த்துக் கவிதை எழுதிக் கொண்டிருப்பவர்கள் பெருகிவிட்டனர்.

நான்கு தசாப்தங்களுக்கு மேல் ஜெர்மனியில் வாழ்ந்து, பெர்லின் வாழ்வின் ஒவ்வொரு அடுக்கினையும் அனுபவித்தறிந்து, பொ.கருணாகரமூர்த்தி தந்திருக்கும் 'பெர்லின் இரவுகள்' அவர் புகலிட இலக்கியத்திற்குத் தந்திருக்கும் அருங்கொடையாகும்.

1973 இலேயே ஸ்ரீசோமாஸ்கந்தாக் கல்லூரியின் மாணவர் தமிழ் அவையின் 'புதுவை' மலரில் தனது 'ஏழை' என்ற சிறுகதைக்கூடாகக் கால் பதித்தாராயினும், சீரிய எழுத்துலகில் அறியப்பட்ட எழுத்தாளராக மூன்று தசாப்தங்களைக் கடந்திருக்கிறார். தமிழகத்தில் நன்கு அறியப்பட்ட எழுத்தாளர்களின் அணிக்குள் முன்வரிசையில் இருப்பவர் கருணாகரமூர்த்தி. இவரின் புனைவுகளை, எழுத்துகளைக்கடந்து தமிழில் புகலிட இலக்கியம் பற்றிப் பேசுவதற்கில்லை. புகலிட எழுத்துகள் பெரிதும் முளைவிடாத காலப்பகுதியிலிருந்து, 'கலைஞன்' சிறுகதையிலிருந்து, 'அகதி உருவாகும் நேரம்' என்ற நாவலுக்கூடாக அவருடைய எழுத்துகளைத் தொடர்ந்து வாசித்து வருபவன் என்ற வகையில், அவரின் கதை சொல்லும் ஆற்றலையும் எழுத்து வளத்தையும் கண்டு வியந்திருக்கிறேன். அவரின் புனைவாற்றலுக்குச் சிறந்த சாட்சியமாக 'பாய்மரத்தில் ஒரு பறவை' என்ற இந்தத் தொகுப்பு அமைந்திருக்கிறது.

## ஜேர்மனிய வாழ்வியலின் அசலான எழுத்து

இன்று தேசங்களின் எல்லைகள் மாற்றமுற்று வருகின்றன. பௌதிக எல்லைகள் கொண்ட, மாறாத, மூடுண்ட, அயல் பிராந்தியங்களிலிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ளும் அரண்களுடன் கூடிய எல்லைகளாக அவற்றை நாம் இன்று காண்பதற்கில்லை. எல்லை என்றால் எது? என்று

நாம் கேட்பதற்கில்லை. சமூகரீதியில் எல்லைகள் எவ்வாறு கட்டமைக்கப்படுகின்றன? என்பதே சரியான கேள்விகளாக அமையும் என்கிறார்கள் எல்லைகள் பற்றிய ஆய்வறிஞர்கள். எல்லைகள் என்பன வரைபடங்களிலும் அட்லஸிலும் பொறிக்கப்பட்ட, உறைந்துபோன வெறும் எல்லைக்கோடுகளாக அல்லாமல், நிலைமாறும் வலயங்களாக மாறிவருகின்றன. கருத்துகளும், மனிதர்களும், பண்டங்களும், மூலதனமும் எளிதாக நுழையவல்லனவாக எல்லைகள் நெகிழ்ந்துள்ளன.

'எல்லைகளற்ற உலகம்' என்ற கண்ணோட்டம் வலுப்பெற்று வருகிறது. அதேநேரம் இன மோதல்கள் வன்முறைக் கிளர்ச்சிகளாக வெடித்து தனித்தனி தேசங்களாக புதிய தேசங்களும் எல்லைகளும் உலக வரைபடத்தில் தோற்றம் காட்டுகின்றன. எல்லைகள் சிதைவதும் புதிய எல்லைகள் உருப்பெறுவதும் (Debordering and Rebordering) இன்றைய தேச எல்லைகளின் நிர்ணயத்தில் பெரும்பங்கு வகிக்கின்றன.

'பாய்மரத்தில் ஒரு பறவை' என்ற கதையில் கதைநாயகன் சுதாஸ் இலங்கையிலிருந்து புறப்பட்டு மத்திய கிழக்கிலிருந்து துருக்கி, கிரீஸ், செர்பியா என்று கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கூடாக, பத்து நாடுகளையாவது எந்தப் பயண ஆவணமுமில்லாமல் பயணிக்கிறான். பெரும்பாலான தமிழ் அகதிகள் விமான வழிப்பயணத்தில் தங்கள் பயணத்தை ஆரம்பித்திருந்தாலும், தரைப் பயணத்தில் பெருங் கஷ்டத்திற்கூடாகவே தங்கள் இலக்கினை அடைந்திருக்கிறார்கள். தமிழ் அகதிகளில் பலர் தங்களின் நீண்ட வழிப்பயணத்தில் உயிரிழந்திருக்கிறார்கள். கடல்வழிப் பயணத்தில் கப்பல் கவிழ்ந்து கணக்கற்ற தமிழ் அகதிகள் மரணித்துள்ளனர்.

ஐரோப்பியக்கரையை அடைய தமிழ் அகதிகள் பட்டிருக்கும் பாட்டின் ஒரு பகுதியினை 'ஒரு பாய்மரத்துப்பறவை' ஒரு case study ஆகவே தந்திருக்கிறது. எண்பதுகளில் புலம்பெயர்ந்தவர்கள் அவற்றிற்கான பணத்தைத் திரட்டவும், பயண ஏஜென்சிகளை அணுகவும் போலிக்கடவுச் சீட்டுகளைத் தயாரிக்கவும், போலி விசாக்களை உருவாக்கவும் உலகின் வெவ்வேறு விமான நிலையங்களைத் தேர்ந்து பயணிக்கவும் மேற்கொண்டிருக்கும் புலம்பெயர் பயண அனுபவங்கள் புகலிட சரித்திரத்தில் இன்றும் முழுமைப்படுத்தப்படாத அத்தியாயங்கள் ஆகும்.

கருணாகரமூர்த்தி தனது கதை நிகழ்வில் நிலத்தோற்றத்தை மிகத்துல்லியமாக, விஸ்தாரமாக விபரிப்பவர். ஒரு தேவாலயத்தை, பெருங் கட்டடத்தை, ஒரு சிலையை விபரிப்பதாயின் நேரமெடுத்து அவை குறித்த தகவல்களை, விபரங்களைத் தேடித் தொகுத்துக் கொள்பவர். அவற்றுக்கான உழைப்பை நல்கத் தயங்காதவர்.

(தொடரும்)



மு.நித்தியானந்தன்...

# வவுனியாவில் 1200 பேருக்கு வெற்றிகரமாக நிறைவடைந்த கண்புரை சத்திர சிகிச்சை

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அண்மையில் ஆரம்பமான 1200 பேருக்கான கண்புரை சத்திரசிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்று நிறைவடைந்துள்ளது.

மலேஷியா அலகா மற்றும் ஆனந்தா அறக்கட்டளைகள் இம்மனிதாபிமானப் பணிக்கு அனுசரணை வழங்கின.

அசிஸ்ட் ஆர்ஆர் மூலம் முழுமையாக நிதியளிக்கப்பட்டு, அசிஸ்ட் ஆர்ஆர் (யுகே & எஸ்எல்) மூலம் பணி நிறைவேற்றப்பட்டுள்ளது.

அசிஸ்ட் ஆர்ஆர் (யுகே & எஸ்எல்) அமைப்பின் சர்வதேச தலைவர் கலாநிதி அ.சர்வேஸ்வரன், இலங்கை தலைவர் பொறியியலாளர் ஹென்றி அமல்ராஜ் ஆகியோர் இப்பணியில் அர்ப்பணிப்புடன் பணியாற்றினார்கள்.





இந்திய 3 அறுவை சிகிச்சை நிபுணர்கள் மற்றும் உள்நாட்டு 3 அறுவை சிகிச்சை நிபுணர்கள் இணைந்து 1200 அறுவை சிகிச்சைகளை முடித்துள்ளனர்.

நோயாளிகள் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். இந்த முகாம் மலேசியாவைச் சேர்ந்த அலகா மற்றும் ஆனந்தா அறக்கட்டளைகளால் அசிஸ்ட் ஆர்ஆர் மூலம் முழுமையாக நிதியளிக்கப்பட்டு, அசிஸ்ட் ஆர்ஆர் (யுகே & எஸ்எல்) மூலம் ஒருங்கிணைக்கப்பட்டது.

நோயாளிகளுக்கு உணவு மற்றும் போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. அசிஸ்ட் ஆர்ஆர் (யுகே & எஸ்எல்) இலங்கை இணைப்பாளர் எந்திரி ஹென்றி அமல்ராஜ் கூறுகையில், "இரண்டு கண்களும் பார்வையற்ற சில நோயாளிகளுக்கு நாங்கள் உதவி செய்துள்ளோம். அவர்கள் மீண்டும் உலகைப் பார்க்க முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். தாராளமாக நன்கொடை வழங்கிய அலகா மற்றும் ஆனந்தா அறக்கட்டளைகளுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

சென்னையில் இருந்து வந்த சத்திரசிகிச்சை நிபுணர்களான டொக்டர் உதய்குமார் தியாகசுந்தரம், டொக்டர் ரகுபதி வடுகபாலயம், டொக்டர் நிசாந் மதிவண்ணன் மற்றும் 3 சத்திரசிகிச்சை நிபுணர்களுக்கும் (சிலாபம் DGHஐச் சேர்ந்த வைத்தியர் கசுன் குணவர்தன, வவுனியா DGHஐச் சேர்ந்த Dr. P. கிரிதரன், முல்லைத்தீவு DGHஐச் சேர்ந்த Dr. Nizma Razick) மற்றும் அவர்களின் குழுவினருக்கும் அவர்களின் தன்னலமற்ற சேவைகளுக்காக நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்" என்றார்.

வி.ரி.சகாதேவராஜா...

# பிராந்திய பாலியல் தொற்று நோய்கள், எயிட்ஸ் தடுப்புப்பிரிவின் பாராட்டுவிழா

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின், தர முகாமைத்துவப் பிரிவின் ஒருங்கிணைப்பில் நடத்தப்பட்டு வரும், பிராந்தியத்திலுள்ள சுகாதார நிறுவனங்களின் தர மேம்பாட்டுக்குப் பங்களிப்புச் செய்த சிறந்த ஊழியர்களைப் பாராட்டும் நிகழ்வு தொடர்பாக, கல்முனை பிராந்திய பாலியல் தொற்று நோய்கள் மற்றும் எய்ட்ஸ் தடுப்புப் பிரிவின் நிறுவன ரீதியான பாராட்டுவிழா அண்மையில் இடம்பெற்றது.

பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர். எம்.என்.எம். தில்ஷான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் டாக்டர் ஸக்கீலா இஸ்ஸடீன் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு அதிதிகளாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தர முகாமைத்துவ வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ.எம். ஹில்மி மற்றும் பணிமனையின் திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர். எம்.ஸி.எம்.மாஹிர் ஆகியோரும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் பிரிவின் சிறந்த உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.





எம்.ஐ.எம்.அஸ்ஹர்...
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# அவுஸ்திரேலிய தலைநகர் கன்பராவில் கலாசூரி சிவகுருநாதன் நூல் வெளியீடு

அவுஸ்திரேலிய தலைநகர் கன்பராவில் கலாசூரி இ.சிவகுருநாதனின் ஊடகப் பணியை கௌரவிக்கும் முகமாக 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூல் வெளியிடப்படவுள்ளது.

தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் கலாசூரி இ. சிவகுருநாதனின் இருபதாம் ஆண்டு நினைவு நூலான 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' வெளியீட்டு விழா எதிர்வரும் 20.01.2024 சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு அவுஸ்திரேலிய தலைநகர் கன்பராவில் நடைபெறவுள்ளது.

கன்பராவில் உள்ள தமிழ் மூத்த பிரஜைகள் சங்க மண்டபத்தில் (Tamil Senior Citizen Hall,11 Bromby Street, Isaacs ACT 2607) சட்டத்தரணி, இலக்கிய ஆர்வலர், எழுத்தாளர் க. திருவருள் வள்ளல் தலைமையில் நிகழ்வு நடைபெறவுள்ளது.

தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்ற முன்னாள் தினகரன் ஆசிரியர் கலாசூரி இ.சிவகுருநாதன் இலங்கை இலக்கியப் பரப்பிலும், ஊடகத்துறையிலும் தனக்கெனப் பல முத்திரைகளைப் பதித்துக் கொண்டவர். தினகரன் பத்திரிகையில் நீண்ட காலம் பிரதம ஆசிரியராக பணியாற்றிய, கலாசூரி இ.சிவகுருநாதன் மிக இலகுவான மொழியில் எல்லோருக்கும் புரியக்கூடிய வகையில் கருத்துக்களை சொல்வதில் வல்லவர்.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக இலங்கையின் உயர் ஸ்தானிகர் திருமதி. சித்ராங்கனி வாகிஷ்வரா இந்நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் மூத்த எழுத்தாளர் லெ.முருகபூபதி நூலை அறிமுகம் செய்து சிறப்புரை வழங்குவார்.

அதன்பின் திரு. நிமலன் கார்த்திகேயன், இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனை படைத்த இரத்தினதுரை சிவகுருநாதனை பற்றிய சிறப்புரை நிகழ்த்துவார்.

தினகரனில் தொடங்கிய கலாசூரி சிவகுருநாதனின் ஊடகப்பணி மற்றும் இலக்கியப்பணி இன்று வரை அவரை எவராலும் மறக்க முடியாத ஆளுமை உள்ளவராக நிலைநிறுத்தியது அவரின் வாழ்வியல் சாதனையாகும். அவரின் இருபதாம் ஆண்டு நினைவாக 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூலின் தொகுப்பாசிரியர் ஐங்கரன் விக்கினேஸ்வரா நூலின் ஏற்புரையை வழங்குவார்.

இதன் பின் இந்த நிகழ்வுகளை ஒழுங்கமைத்து, தொகுத்து வழங்கும் சின்னத்துரை மயூரன் நன்றியுரையுடன் இறுதியாக விழா நிறைவு பெறும்.


இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனை படைத்த இரத்தினதுரை சிவகுருநாதன் அவர்களின் இருபதாம் ஆண்டு நினைவாக 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூல் வெளியாகி உள்ளது.

தினகரனில் தொடங்கிய கலாசூரி சிவகுருநாதனின் ஊடகப்பணி மற்றும் இலக்கியப்பணி இன்று வரை எவராலும் மறக்க முடியாத ஆளுமை உள்ளவராக தொடர்கின்றது என்பது அவரின் வாழ்வியல் சாதனையாகும். அவரின் இருபதாம் ஆண்டு நினைவாக (08/08/2003) 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூலை ஐங்கரன் விக்கினேஸ்வரா தொகுத்துள்ளார்.

மூன்று பாகங்களாக வெளிவரும் 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' நூலில் தமிழர்களின் பாரம்பரிய கலாசாரத்தையும், பண்பாட்டு விழுமியங்களையும் பேணிப் பாதுகாத்த கலாசூரி சிவகுருநாதன் ஆற்றிய பெருங்கடமையை ஊடக, இலக்கிய அறிஞர்களின் திறனாய்வு கட்டுரைகள் அலங்கரிக்கின்றன.

இந்நூலின் முதல் அங்கம் 'ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்குக் களம் தந்த தினகரன் சிவகுருநாதன்' எனும் பகுதி அவரைப் பற்றிய வரலாற்றுப் பதிவுகளும், திறனாய்வு ஆக்கங்களை பல ஊடக ஆளுமையாளர்கள் எழுதியுள்ளனர்.

இரண்டாம் அங்கம் 'பத்திரிகை ஆசிரியர்களுள் மக்கள் திலகம்' எனும் பகுதியாக அவரைப் பற்றிய அரசியல் வல்லுநர்களின்அஞ்சலிகளும், ஆராதனைகளும் இடம்பெற்றுள்ளன.




இந்நூலில் 'பூமாலைக்கு ஏன் பாமாலை' எனும் மூன்றாம் பகுதியில் கவிதைகளில் தெரிந்த சிவகுருநாதன் சிந்தனைகளை பல கவிஞர்கள் வடித்துள்ளனர். தினகரனில் ஆசிரியராக பணியாற்றிய காலத்தில் கலாசூரி சிவகுருநாதன் பல இளம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதில் முன்னின்றதற்கு சாட்சியமாக இக்கவிதைகள் உள்ளன.



# இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் 2024ஆம் ஆண்டுக்கான நிர்வாகிகள் தெரிவு

அவுஸ்திரேலியாவிலிருந்து கடந்த 36 வருடங்களுக்கும் மேலாக இயங்கி வருகின்ற தன்னார்வத் தொண்டு நிறுவனமான இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நிதியத்தின் தலைவர் லெ. முருகபூபதி தலைமையில் மெய்நிகரில் நடைபெற்றது.

இலங்கையில் முன்னர் நீடித்திருந்த போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த ஏழைத் தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவி வரும் மாணவர் கல்வி நிதியம், அவுஸ்திரேலியா விக்ரோரியா மாநிலத்தில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனமாகும்.

கடந்த ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் வடக்கு – கிழக்கு – மலையகம் மற்றும் மேற்கிலங்கையில் இந்நிதியத்தினால் உதவி பெற்று வரும் மாணவர்களின் தொடர்பாளர் அமைப்புகளின் ஊடாக நடத்தப்பட்ட மாணவர் ஒன்றுகூடல், நிதிக்கொடுப்பனவு நிகழ்ச்சிகள் பற்றிய விபரமான தகவல்களும் படங்களும் உள்ளடக்கப்பட்ட அறிக்கையும் இக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

நிதியத்தின் செயலாளர் திருமதி விதுஷினி விக்னேஸ்வரன் கடந்த ஆண்டு நடைபெற்ற பொதுக்கூட்டத்தின் அறிக்கையை சமர்ப்பித்தார். நிதிச்செயலாளர் திருமதி திவானா அஜந்தன் நிதியறிக்கையை (2022 – 2023) சமர்ப்பித்தார்.

இலங்கையில் வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்திருப்பதை கவனத்தில் கருதிய கல்வி நிதியம், மலரும் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல், மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவையும் அதிகரிக்கவிருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.








2024 ஆம் ஆண்டுக்கான நிருவாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

தலைவர்: திருமதி விதுஷினி விக்னேஸ்வரன்,
துணைத்தலைவர்: லெ. முருகபூபதி,
செயலாளர்: குமாரசாமி கிருஷ்ணகுமார்,
நிதிச்செயலாளர்: திருமதி திவானா அஜந்தன்,
துணை நிதிச்செயலாளர்: சதீஸ்வரன் தியாகராஜா

செயற்குழு உறுப்பினர்கள்: திருமதி சிவமலர் சபேசன், ரோகான் முருகையா, திருமதி வாசுகி பிரபாகரன், திருமதி ஸ்ரீஜீவனி ரவிகாந்த்

கணக்காய்வாளர்: ஏ.வி. முருகையா

# தம்பிலுவிலில் களைகட்டிய திருவாசக மாநாடு; இந்திய, இலங்கை சுவாமிகள் பங்கேற்பு

அம்பாறை மாவட்டம் இந்து ஸ்வயம் சேவக சங்கத்தின் எற்பாட்டில் தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய கலை அரங்கில் மூன்று தினங்களாக திருவாசக மாநாடு சிறப்பாக நடைபெற்றது.

திருவாசக மாநாட்டின் 03 ஆம் நாள் நிகழ்வுகள் தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய கண்ணகி கலையரங்கில் ஆரம்பமாகி தவத்திரு சிவாக்கர தேசிய சுவாமியின் அருளுரை, மாநாட்டின் திருவாசக நூல் வெளியீடு என்பவற்றுடன் இந்த ஆண்டுக்கான திருவாசக மாநாடு நிறைவடைந்தது.

சமய சமூக ஆன்மிக இறை ஆசி கிடைக்க வேண்டும் என்னும் நோக்குடன் இந்தியாவில் இருந்து சூரியநார் கோவில் ஆதின தவத்திரு சிவாக்கர தேசிய சுவாமிகள் வருகை தந்திருந்தார்.

அவரது வருகையை ஒட்டி இந்து ஸ்வயம் சேவக சங்கமும் ஆலயங்களும் மற்றும் இந்து சமய அமைப்புக்களும் இணைந்து திருவாசக மாநாட்டை அம்பாறை மாவட்ட தம்பிலுவிலில் நடத்தின.

இறுதி நாள் நிகழ்வில் இராமகிருஷ்ண மிஷன் இலங்கை தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தா ஜீ மகராஜ், மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்தியா சூரியநார் கோவில் ஆதின தவத்திரு சிவாக்கர தேசிய சுவாமிகள் மற்றும் இ.கி.மி சுவாமிகள் திருவாசகம் தொடர்பான சிறப்பு சொற்பொழிவு ஆற்றினார்கள்.

முதலாம் நாள் நிகழ்வுகள் 'திருவாசகம் ஓதுதலும் பொருள் கூறலும்' என்ற தலைப்பில் இடம்பெற்றது.கலாபூஷணம் தம்பிமுத்து மகேந்திரா தலைமையில் திருவாசக மாநாடு ஆரம்பமாகி இடம்பெற்றது.

இந்நிகழ்வில் , ஆலய அறங்காவலர்கள், பிரதேச பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.







காரைதீவு குறூப் நிருபர்...

# இந்திய நாடாளுமன்ற வரலாற்றில் என்றுமே சந்தித்திருக்காத சம்பவம்!

## அவைக்குள் வண்ணப்புகை பீச்சும் கருவிகளுடன் இளைஞர்கள் பிரவேசித்ததன் எதிரொலி!

இந்திய நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மேலும் 49 எம்.பிக்கள் மழைக்கால கூட்டத்தொடரில் இருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதன் மூலம் நாடாளுமன்ற அவைக்குள் நுழைவதற்குத் தடை செய்யப்பட்டுள்ள எம்.பிக்களின் எண்ணிக்கை 141 ஆகியுள்ளது. இச்சம்பவத்தையடுத்து எதிர்க்கட்சிகள் போராட்டத்தில் குதித்துள்ளன.

கடந்த 13 ஆம் திகதியன்று மக்களவையில் பார்வையாளர்கள் மாடத்தில் இருந்த இரண்டு இளைஞர்கள் திடீரென அவை மேசைகளில் குதித்துத் தாவினர். அவர்களின் கைகளில் வண்ணப்புகை பீச்சும் கருவிகள் இருந்ததாக சம்பவத்தின் போது அவையில் இருந்த எம்.பிக்கள் பின்னர் வெளியே வந்து பேட்டியளித்தனர்.

அதுமட்டுமன்றி, நாடாளுமன்ற வளாகத்தின் வெளியிலும் இருவர் புகை பீச்சும் கருவிகளுடன் கோஷமிட்டனர். இந்த விவகாரத்தில் இதுவரை ஆறு பேர் கைது செய்யப்பட்டனர். இந்தச் சம்பவங்கள் அனைத்தும் இந்தியப் பாராளுமன்றம் முன்னர் பயங்கரவாதிகளால் தாக்குதலுக்கு உள்ளான நினைவு நாளில் இடம்பெற்றன.

இதையடுத்து எதிர்க்கட்சிகள், பிரதமர் நரேந்திர மோடி அல்லது உள்துறை அமைச்சர் அமித் ஷா இந்தச் சம்பவம் தொடர்பாக விளக்கம் அளிக்க வேண்டும் எனக் கூறி வந்தனர்.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இந்த விவகாரத்தை எதிர்க்கட்சி எம்.பிக்கள் எழுப்பினர்.

இந்த நிலையில் கடந்த திங்களன்று மக்களவை மற்றும் மாநிலங்களைவை என இரு அவைகளிலும் சேர்த்து 78 எம்.பிக்கள் ஒழுக்கக்கேடான முறையில் நடந்து கொண்டதாகக் கூறி நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் முழுக்க இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

ஒரே நாளில் 78 எம்.பிக்கள் இடைநீக்கம் என்பது இந்திய நாடாளுமன்றம் இதுவரை காணாத சம்பவம் என உள்ளூர் ஊடகங்கள் குறிப்பிட்டன.

இச்சம்பவத்தையடுத்து எதிர்க்கட்சித் தலைவர்கள் நாடாளுமன்ற வாயிலில் போராட்டத்தில் ஈடுபட்டனர். 'இந்தச் சம்பவம் ஒரு ஜனநாயகப் படுகொலை' எனக் குறிப்பிட்டனர்.

இந்த நிலையில் செவ்வாய்க்கிழமை டிசம்பர் 18 ஆம் திகதி மேலும் 49 எம்.பிக்கள் இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

முன்னதாக கடந்த டிசம்பர் 14 ஆம் திகதி 13 மக்களவை உறுப்பினர்களும், 1 மாநிலங்கவை உறுப்பினரும் இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

ஆகவே ஒரு வாரத்தில் இடைநீக்கம் செய்யப்பட்ட எம்.பிக்கள் எண்ணிக்கை மட்டும் 141 ஐ நெருங்கியுள்ளது.

இவர்களில் பெரும்பாலானவர்கள் பிரதமர் ரேந்திர மோடியின் பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு எதிரான இந்தியா கூட்டணியைச் சேர்ந்த கட்சிகளின் எம்.பிக்கள் ஆவர்.

543 உறுப்பினர்களை கொண்ட மக்களவையில் இந்தியா கூட்டணி சார்பில் 142 எம்.பிக்கள் உள்ளனர். இவர்களில் 95 பேர் தற்போது இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதேபோல் 250 உறுப்பினர்களை கொண்ட மாநிலங்களவையில் இந்தியா கூட்டணியின் 101 எம்பிக்கள் உள்ளனர். இவர்களில் 46 பேர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற கூட்டத்தொடர் நிறைவடைந்தது. இவர்கள் பங்கெடுக்க முடியாமல் போனது. அதுமட்டுமின்றி ஏராளமான எம்.பிக்கள் அவையில் பங்கெடுப்பது குறித்து முடிவெடுக்க நாடாளுமன்ற உரிமைக் குழுவுக் பரிந்துரைக்கப்பட்டுள்ளதால், அவர்கள் மேலும் சில காலம் காத்திருக்க நேரிடலாம்.

"துரதிருஷ்ட வசமாக இந்தியாவில் நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கு நாம் இரங்கல் எழுதத் தொடங்க வேண்டும்" என காங்கிரஸ் எம்.பி சஷிதரூர் கூறினார்.

ஆனால் நாடாளுமன்ற அவை நடவடிக்கைகளில் வேண்டுமென்றே குறுக்கீடு செய்யவேண்டுமென எதிர்க்கட்சிகள் திட்டமிட்டு செயல்பட்டதாக பா.ஜ.க குற்றம் சாட்டுகின்றது.

நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு குளறுபடி குறித்து விவாதிக்க வேண்டும் என தொடர்ச்சியாகவே எதிர்கட்சிகள் வலியுறுத்தி வந்தன. ஆனால் பிரதமர் நரேந்திர மோடி இந்த விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் பேசவில்லை. எனினும், ஒரு நாளிதழுக்கு அளித்த பேட்டியில், "நடந்த விஷயம் மிகவும் தீவிரமானது. இதற்கு விவாதம் தேவையில்லை, தீவிர விசாரணை தான் தேவை" எனத் தெரிவித்தார்.

உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் நாடாளுமன்றத்தில் இந்த விவகாரம் குறித்துப் பேசவில்லை. எனினும் இந்த விவகாரம் குறித்து விசாரிக்க ஒரு உயர் மட்ட குழு அமைக்கப்பட்டிருப்பதாகவும், எதிர்க்கட்சிகள் இதை அரசியலாக்க முயல்கின்றன என்றும் ஒரு நிகழ்ச்சியில் பேசினார்.

பல முக்கியமான மசோதாக்களை எந்தவித விவாதமுமின்றி நிறைவேற்ற, அரசு வேண்டுமென்றே எதிர்க்கட்சி எம்.பிக்களை இடைநீக்கம் செய்துள்ளதாக கார்கே உள்ளிட்ட எதிர்க்கட்சித் தலைவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஆனால், எதிர்க்கட்சிகள் முக்கியமான மசோதாக்களை நிறைவேற்றாமல் தடுக்க வேண்டுமென்ற திட்டத்துடன் அவை நடவடிக்கைகளில் திட்டமிட்டு குறுக்கீடு செய்ததாக மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் தெரிவித்துள்ளார். மேலும் எதிர்க்கட்சி எம்.பிக்கள் நாடாளுமன்றத்தை அவமதித்ததாகவும் லோக்சபா, ராஜ்யசபா சபாநாயகர்களின் கோரிக்கைகள் ஏற்க மறுத்ததாகவும் பியூஸ் கோயல் குற்றம் சாட்டினார்.





## எம்.பிக்கள் 141 பேர் இடைநீக்கம் செய்யப்பட்டதால் உருவாகியுள்ள பரபரப்பு!

## 10 அமைச்சுகளுக்கான...

செயலாளராக குணதாச சமரசிங்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். சுற்றாடல் அமைச்சின் செயலாளராக பி.கே. பி.சந்திரகீர்த்தி, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளராக கலாநிதி சுலக்ஷன ஜயவர்தன, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளராக பொறியியலாளர் ரஞ்சித் ரூபசிங்க, தொழில்நுட்ப அமைச்சின் செயலாளராக கலாநிதி தர்மசிறி குமாரதுங்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். வடமத்திய மாகாணத்தின் பிரதம செயலாளராக ஆர்.எம்.டபிள்யூ.எஸ்.சமரதிவாகர மற்றும் மேல் மாகாண பிரதம செயலாளராக எஸ்.எல். டி.கே.விஜயசிங்க ஆகியோரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

## வெற்றிகரமான பிரதிபலன்களை...

நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உடனடியாக தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் (21) நடைபெற்ற விவசாயத்தை நவீனமயமாக்கல் தொடர்பாக அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கும் கூட்டத்தில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க இந்த பணிப்புரையை வழங்கினார்.

மாகாணத் தலைவர்கள், மாவட்டத் தலைவர்கள் மற்றும் இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்ட 26 பிரதேச செயலாளர் பிரிவுகளின் தலைவர்கள் இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் தொடர்பில் தேசிய ரீதியில் தீர்மானங்களை எடுப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் பிரதமர், உரிய அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் 09 மாகாணங்களின் பிரதம செயலாளர்கள் உள்ளடக்கிய வகையில் நிறுவப்பட்டுள்ள குழுவுக்கு மேலதிகமாக விவசாய நவீனமயமாக்கல் செயலகமொன்றை அமைக்க தீர்மானிக்கப்பட்டது. விவசாய நவீனமயமாக்கல் அறிவு மற்றும் சேவைகளுக்கான மையமாக இந்த செயலகம் செயற்படவுள்ளது.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய இந்த வேலைத்திட்டத்துக்கு தனியார் துறையினரின் பங்களிப்பை பெறுவதற்கு தேவையான சட்ட வரைவுகள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் வலியுறுத்தப்பட்டது.

அதேபோன்று விவசாய நவீனமயமாக்கலுக்கு 08 பிரதான அமைச்சுகள் பயன்படுத்தப்படவுள்ளதாகவும், 08 திணைக்களங்களின் ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்ட 26 பிரதேச செயலகங்களில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் இணைந்துகொண்ட சிரேஷ்ட பேராசிரியர் காமினி சேனாநாயக்க இலங்கை தற்போது எதிர்நோக்கும் விவசாயப் சிக்கல்கள் தொடர்பிலும் விசேட உரை நிகழ்த்தினார்.

2024ஆம் ஆண்டு விவசாய உற்பத்தித்திறனை அதிகரிக்க ஜனாதிபதி செயலகத்தின் ஊடாக தேவையான ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த செயற்பாட்டுடன் மாத்திரம் நின்றுவிடாது விவசாயத்துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் கவனம் செலுத்துமாறு பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.சமரதுங்க தனது உரையில் தெரிவித்தார்.

உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி சுரேன் படகொட, மாகாண பிரதம செயலாளர்கள், துறைசார் நிறுவனங்களின் தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளின் செயலாளர்கள் உள்ளிட்டோர் இக்கலந்துரையாடலில் பங்கெடுத்திருந்தனர்.

## சுற்றுலா, கல்வித்துறை,...

காத்மாண்டுவில் நிறைவடைந்தது. இதன்போதே இருவரும் பரஸ்பரம் சந்தித்து பேச்சு நடத்தினர்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக கடந்த புதன்கிழமை நேபாளத்தின் காத்மாண்டுவை சென்றடைந்தார்.

இரு தரப்பினரும் பரஸ்பர நலன் மற்றும் ஒத்துழைப்பின் புதிய காட்சிகளை திறப்பது தொடர்பான விடயங்களை பற்றி விவாதித்ததாக நேபாள அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேபாள தூதுக்குழுவில் வெளிவிவகார அமைச்சர் என். பி.சௌத், வெளிவிவகார செயலாளர் சேவா லாம்சல், இலங்கைக்கான நேபாள தூதுவர் பாசுதேவ் மிஸ்ரா மற்றும் வர்த்தகம், உட்துறை மற்றும் வெளிவிவகார அமைச்சுகளின் மூத்த அதிகாரிகள் இருந்தனர். அதேபோன்று, காத்மாண்டுவுக்கான இலங்கைத் தூதுவர் சுதர்சன பத்திரண மற்றும் அந்நாட்டின் மூத்த வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளும் இலங்கைக் குழுவில் இருந்தனர்.

நேபாள வெளிவிவகார அமைச்சின் கூற்றுப்படி வர்த்தகம் மற்றும் முதலீட்டை மேம்படுத்துதல், விமான இணைப்பை அதிகரிப்பது, கலாசாரம், சுற்றுலா மற்றும் கல்வித்துறைகளில் பரிமாற்ற திட்டங்கள், சார்க் மற்றும் பிம்ஸ்டெக் செயல்முறைகள் மற்றும் பலதரப்பு மன்றங்களில் ஒத்துழைப்பு உள்ளிட்ட பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் ஆகியவை குறித்தும் காத்மாண்டுகொழும்பு விமான இணைப்பின் செயல்பாடு ஊக்கமளிக்கிறது என்று கூறிய இரு தரப்பினரும், கொழும்புக்கும் லும்பினிக்கும் இடையிலான விமான சேவையின் சாத்தியக்கூறுகள் குறித்தும் விவாதித்தனர்.

இலங்கை சிறையில் உள்ள மூன்று நேபாள பிரஜைகளை இடமாற்றம் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் இரு அமைச்சர்களும் கருத்து பரிமாறிக் கொண்டனர்.

## கைதிகளுக்கு போதைப்பொருள்...

போதைப்பொருள் 110 மில்லிகிராம், இரண்டு பீடிகள் மற்றும் ஒரு சிகரெட் ஆகியவற்றை கைப்பற்றியுள்ளதுடன், சிறைச்சாலை கட்டுப்பாட்டாளரிடமிருந்து சந்தேகத்திற்கிடமான ஒரு சிறு கையடக்கத் தொலைபேசியும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களான சிறைச்சாலை அதிகாரிகள் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் கடந்த 21ஆம் திகதி பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பக்கட்ட விசாரணையின் போது சந்தேக நபர்கள் இருவரையும் அங்குனுகொலபெலஸ்ஸ மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ஜனாதிபதியுடனான சந்திப்புகளை...

தொகையை அதிகரிப்பது, யாழ்ப்பாண விமான நிலைய அபிவிருத்தி மற்றும் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி தொடர்பாக ஜனாதிபதி தனது கரிசனையை வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாண சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தொடர்பிலும் கிளிநொச்சி நவீன நகராக்கத் திட்டம் தொடர்பிலும் ஆராய்வதற்கு என்னை நியமித்துள்ளார். இந்த சந்திப்பில் காணாமல் ஆக்கப்பட்ட விவகாரம் தொடர்பிலும் ஆராயப்பட்டதுடன், இவ்விடயங்களை கையாள்வதற்கு விசேட நீதிபதிகளை உள்ளடக்கிய விசேட நீதிமன்றமொன்றை நடைமுறைப்படுத்துவதாக தெரிவித்தார்.

அதுமட்டுமல்லாது மாகாண சபை அனுமதியுடன் உயர் கல்வி நிறுவனங்களை ஆரம்பித்து மூன்று வருடங்களின் பின் பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

ஆகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சந்திப்புகளை தமிழ் கட்சிகள் உரிய வகையில் பயன்படுத்துவதன் மூலம் மக்களுக்கான அபிவிருத்தியை முன்னெடுக்க முடியும்" என தெரிவித்தார்.

## அத்தியாவசிய மருந்துகளை...

உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன. இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் Tareq Md Ariful Islam மருந்துப் பொருட்களை சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரணவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை மற்றும் பங்களாதேஷ் சுகாதார அமைச்சுக்களுக்கு இடையில் இது தொடர்பாக நடத்தப்பட்ட கலந்துரையாடலுக்கு அமைய இலங்கை விடுத்த கோரிக்கைக்கு அமைய அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் பெறப்பட்டுள்ளன.

நன்கொடையாக வழங்கப்பட்ட மருந்துப் பொருட்கள் மூன்று மாதங்களுக்கு இலங்கையின் மருந்துத் தேவையை ஈடுசெய்ய போதுமானதென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த மருந்து நன்கொடை பங்களாதேஷின் மாநில மருந்துப் பிரிவான எசென்ஷியல் டிரக்ஸ் கம்பெனி லிமிடெட் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டது என்று அமைச்சகம் மேலும் கூறியது.

## மாணவர்களை இலக்கு வைத்த...

இந்த சிறந்த செயற்பாட்டுக்கு எதிராக கருத்து தெரிவிப்பவர்களுக்கு எந்தவொரு உரிமையும் கிடையாது. பாதாளக்குழு செயற்பாடுகளையும் போதைப்பொருள் பாவனையையும் முற்றாக அழிப்பதற்கு நாட்டு மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டுமெனவும், அவர் தெரிவித்துள்ளார். கொழும்பு வடக்கு சமூக பொலிஸ் குழு ஏற்பாடு செய்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, "உங்களின் குடும்பங்களை இல்லாமல் ஒழிக்கும் போதைப்பொருளை முற்றாக அழிக்கும் வேலைத்திட்டமே இதுவாகும். நாட்டின் அனைத்து பகுதிகளிலும் பரவியுள்ள போதைப்பொருள் நகரங்கள் முதல் சிறு பிரதேசங்கள் வரையில் பரவியுள்ளது. அவற்றை முற்றாக சமூகத்தில் இருந்து அழிக்க வேண்டும். எனவே இந்த சிறந்த செயற்பாட்டுக்கு எதிராக கருத்து தெரிவிப்பவர்களுக்கு எந்தவொரு உரிமையும் கிடையாது. பாதாளக்குழு செயற்பாடுகளையும் போதைப்பொருள் பாவனையையும் முற்றாக அழிப்பதற்கு நாட்டு மக்கள் அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். அதற்காக சிறந்த திட்டங்களை செயற்படுத்தியுள்ளோம். எதிர்காலத்திலும் செயல்படுத்துவோம்.

சில பிரதேசங்களுக்கு போதைப்பொருளை விற்பனை செய்வது யாரென்பது குற்றப்புலனாய்வு பிரிவினர் எமக்கு அறிவித்துள்ளனர். எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படாத மற்றும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட போதைப்பொருட்கள் உங்களது குழந்தைகளின் எதிர்காலத்தை சீர்குலைக்கின்றது. இந்த பொலிஸ் விசேட சுற்றிவளைப்பு போதைப் பொருட்களை இறக்குமதி செய்யும் தரப்பினரை இலக்கு வைத்தே மேற்கொள்கிறோம். மேற்கொள்ளப்பட்டுள்ள ஒவ்வொரு சுற்றிவளைப்புகளின் போதும் மிக முக்கிய குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுள் போதைப்பொருள் விற்பனை செய்யும் தரப்பினரும் உள்ளடங்கியுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் 4 ஆயிரம் பேர் பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருளை விற்பனை செய்துள்ளனர். இவர்களை கைது செய்து அவர்களிடமிருக்கும் சொத்துகளையும் கைப்பற்றும் வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்பட்டுள்ளது" என்றார்.

## மலேசியாவிலிருந்து புதிய...

இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இந்த விமானம் நேற்று முன்தினம் (21) மாலை கொண்டுவரப்பட்டது.

தேவையான ஓவிய வேலைகள் மற்றும் இதர சேவை வசதிகளை ஏற்படுத்திய பின்னர் எதிர்வரும் 29ஆம் திகதி கட்டுநாயக்காவிலிருந்து மாலைதீவுக்கு தனது முதல் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது. அதிக எரிபொருள் திறன் கொண்ட விமானத்தில் 12 Business Class இருக்கைகள் மற்றும் 138 Economy Class இருக்கைகள் உள்ளன. இந்த புதிய விமானம் இந்திய துணைக்கண்டம், தூர கிழக்கு மற்றும் மத்திய கிழக்கு வான் மண்டலங்களுக்கு தனது விமான நடவடிக்கைகளை சேர்க்க உள்ளது.

புதிய விமானத்தை கொள்வனவு செய்ததன் மூலம் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 12 NarrowBody விமானங்களையும், 10 WideBody விமானங்களையும் கொண்டுள்ளதுடன், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான மொத்த விமானங்களின் எண்ணிக்கை 22ஆக அதிகரித்துள்ளது. 2024 ஜனவரி முதல் வாரங்களில் மற்றொரு WideBody Airbus ஏ.330 விமானம் மற்றும் ஏர்பஸ் நியோ (ஏர் பஸ் ஏ.நியோ) குழுவானது தற்போது இலங்கை விமானத்தின் பாகத்தில் குறைபாடு காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது. 02 இன்ஜின்களை குத்தகை அடிப்படையில் பெறுவதற்கும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அவற்றை பெற்றுக்கொண்டதன் பின்னர் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸுடன் மேலும் 03 விமானங்களை இணைத்து, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான மொத்த விமானங்களின் எண்ணிக்கை 25ஆக அதிகரிக்கப்படும்.

எதிர்வரும் மார்ச் மாதத்தில் மற்றுமொரு Airbus விமானத்தை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ள ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நடவடிக்கை எடுத்துள்ளது. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், கட்டுநாயக்காவிலிருந்து உலகின் 21 நாடுகளில் உள்ள 36 இடங்களுக்கு தனது நேரடி விமான சேவைகளை நடத்தி வருகிறது.

## கிழக்கு முன்னாள் முதலமைச்சர்...

பாதிக்கப்பட்டிருந்த இவர், கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையொன்றில், சிகிச்சை பெற்று வந்த அவர் தனது 66 ஆவது வயதில் காலமானார்.

இவர் தகவல் ஒளிபரப்பு முன்னாள் பிரதி அமைச்சர் மர்ஹூம் ஏ.எல்.அப்துல் மஜீத்தின் புதல்வராவார். தனது தந்தையின் மரணத்தை தொடர்ந்து, அவர் பிரதிநிதித்துவப்படுத்திய, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மூலம் அரசியலில் கால் பதித்தார்.

இவரது முதலாவது அரசியல் பிரவேசம் 1989ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலாகும். இதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பாக திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டார். எனினும் பாராளுமன்ற உறுப்பினராக முடியவில்லை.

இதனை அடுத்து, 1993ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்றார். அந்த வகையில் கிண்ணியா பிரதேச சபை வரலாற்றில் முதல் தவிசாளர் என்ற பெருமையை இவர் பெற்றார்.

1994 பொதுத்தேர்தலில் சந்திரிக்கா – அஸ்ரப் உடன்படிக்கைக்கு இணங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி, முஸ்லிம் காங்கிரஸ் மரச்சின்னத்தில் நஜீப் ஏ.மஜீத் போட்டியிட்டு, வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினரானார். அந்த வகையில் திருகோணமலை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் மரச்சின்னத்தில் வென்ற முதல் எம்.பி. என்ற பெருமையையும் இவர் பெற்றார்.

2000ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுசன முன்னணி (PA) சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, தபால் தொலைத்தொடர்பு பிரதி அமைச்சராகவும் நியமனம் பெற்றார்.

2001 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் (UPFA) போட்டியிட்டு, வெற்றி பெறாத போதும், 2004 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில், முஸ்லிம் காங்கிரஸ் மரச்சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்று, உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் பிரதியமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். 2007 இல் நடந்த அமைச்சரவை மாற்றத்தின் போது, அமைச்சரவை அந்தஸ்தற்ற கூட்டுறவு அமைச்சுப் பதவி இவருக்கு வழங்கப்பட்டது. அந்த வகையில் கிண்ணியாவின் முதல் முழு அமைச்சர் அந்தஸ்து என்ற பெருமையும் இவர் பெற்றார்.

2010 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் இவர் போட்டியிட்டு உறுப்பினராக முடியவில்லை.

என்றாலும், 2012 இல் நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்டு, வெற்றி பெற்று மாகாணசபை உறுப்பினரானார். அத்தோடு, கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சர் நியமனம் இவருக்கு வழங்கப்பட்டது. அந்த வகையில் கிண்ணியாவின் முதலாவது முதலமைச்சர் என்ற பெருமையையும், இலங்கையின் முதல் முஸ்லிம் முதலமைச்சர் என்ற பெருமையையும் இவர் பெற்றார்.

2015 பொதுத் தேர்தலில் இவர் போட்டியிட்ட போதிலும், இவரால் வெற்றி பெற முடியவில்லை.

இதன்பின்னர் 2020 இல் நடந்த போதுத் தேர்தலில் இவர், தேசிய காங்கிரஸ் மூலம் தேர்தல் விண்ணப்பம் செய்திருந்த போதும் அந்தக் கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டதால் இவரால் அந்த தேர்தலில், போட்டியிடவில்லை.

இவ்வாறு அரசியலில், முதன்மையானவர் என்ற பல சாதனைகளை நிலை நாட்டிய இவர், அரசியல் பொறுப்புகளை சுமந்தவர் என்ற வகையில் முடியுமான பல சேவைகளை இன, மத, பேதமற்ற முறையில், மாவட்டம் முழுவதும் செய்துள்ளார்.

சிறிது காலம் உடல்நலக் குறைவுடன் காணப்பட்ட இவர், கொழும்பில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த போது, சிகிச்சை பலனளிக்காமையினால், நேற்று 23ஆம் திகதி அதிகாலை காலமானார். இவரது ஜனாஸா கொழும்பிலிருந்து கிண்ணியாவுக்கு கொண்டு செல்லப்பட்டு கிண்ணியா பொது மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## கொவிட்19 காலத்தில்...

நிதி தொடர்பிலான அறிக்கையை முகப்பு பக்கத்தில் பதிவிட்ட பின்னர் 28.10.2020 ஆம் திகதி முதல் இணையப் பக்கத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டன. இது குறித்த அறிவித்தல் மற்றும் நிதி தொடர்பிலான விடயங்கள் மாத்திரமே இணையத்தின் முகப்புப் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

எனினும், இதனையும் முழுமையாக இடைநிறுத்த ஜனாதிபதி செயலகம் தீர்மானித்துள்ளது. தற்போது இந்த இணையப்பக்கம் பயன்பாட்டில் இல்லை என்பதால் இணையப்பக்கத்தின் பெயரை வேறு தரப்பினர் தவறான வழியில் பயன்படுத்துவதற்கான இயலுமை இருப்பதால் இந்த அறிவித்தலை ஜனாதிபதி செயலகம் வெளியிடுகிறது.

## 05 Kg தங்கநகைகளுடன்...

கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்தில் சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவு அதிகாரிகள் குழுவால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

35 வயதுடைய இந்தியப் பெண்ணான இவர் கண்டியைச் சேர்ந்த ஒருவரை திருமணம் செய்துள்ளதாகவும் அவர் இந்த நாட்டில் வசிக்க வதிவிட விசாவைப் பெற்றுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

டுபாயிலிருந்து எமிரேட்ஸ் எயார் லைன் விமானமான EK648 இல் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் தனது இரண்டு சிறிய குழந்தைகளுடன் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு இவர் வந்திருந்தார். தனது இடுப்பில் பிரத்தியேக பட்டியொன்றை கட்டிக்கொண்டு அதில் 08 பார்சல்களில் வைக்கப்பட்டிருந்த 1,438 பவுண் நகைகளை மறைத்து வைத்திருந்ததாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் அவரை தடுத்து வைத்து மேலதிக விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

## முல்லைத்தீவில் கன மழையால்...

சேர்ந்த 1,215 பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.

மழை சற்று குறைவடைந்ததையடுத்து வெள்ளநீர் வடிந்தோட ஆரம்பித்துள்ளது. ஏழு இடைத்தங்கல் முகாம்களில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டிருந்த 412 குடும்பங்களை சேர்ந்த 1,215 பேரும் அவர்களது வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

## சந்தோஷ் ஜா...

2017 ஜூலை முதல் 2019 ஜுன்வரை வொஷிங்டன் டிசியில் உள்ள இந்தியத் தூதரகத்தில் தனிப்பட்ட தூதராகப் பணிபுரிந்தார். 2010ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டுவரை பிரஸ்ஸல்ஸில் உள்ள இந்திய தூதரகத்தில் துணைத் தூதுராகவும் இவர் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 24ஆம் திகதி பத்திரிகையுடன்...

எதிர்வரும் 31ஆம் திகதி முதல் வழமைப்போன்று வர்த்தமானி வெளிவரும் என்பதை அறியத்தருகிறோம்.

## இன்றைய பலன்கள்


### ( 23. 12. 2023 )

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா

(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)




**மேஷம்:**




போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் ஏற்படும். புனித பயணங்கள் அதிகரிக்கும்.

**ரிஷபம்:**



ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். தொழில் ரீதியாக எடுத்த புது முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

**மிதுனம்:**




மனச்சோர்வு அதிகரிக்கும். எளிதில் முடிக்கக்கூடிய காரியங்கள் கூட மலைப்பாக தோன்றும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும்.

**கடகம்:**



தொழில் முன்னேற்றம் உண்டு. வியாபார போட்டிகள் அதிகரிக்கும் அதை சமாளிப்பீர்கள். குடும்பத்திற்காக அதிகம் செலவிட நேரிடும்.

**சிம்மம்:**



எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். இல்லம் தேடி நல்ல தகவல் வந்து சேரும்.

**கன்னி:**




தைரியத்தோடும் தன்னம்பிக்கையோடும் செயற்படுவீர்கள். தர வரவு திருப்திகரமாக இருந்தாலும் விரயங்கள் அதிகரிக்கும்.

**துலாம்:**



நினைத்தது நிறைவேறும். நிகழ்கால தேவைகள் பூர்த்தியாகும். தொழில் வளர்ச்சி திருப்தி தரும்.

**விருச்சிகம்:**




தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.

**தனுசு:**




ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை தேவை. அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சியில் ஆதாயம் குறைவாகவே கிடைக்கும்.

**மகரம்:**



உடல்நலம் சீராகும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். கடன் சுமை குறையும். கவலைகள் அகலும்.

**கும்பம்:**



லாபமும் விரையமும் சம அளவில் இருக்கும். செலவிற்கு முன்னதாகவே வரவு வந்து சேரும்.

**மீனம்:**



அதிக விரயங்கள் ஏற்படலாம். திடீர் திடீரென மாற்றங்களும் எதையும் அரைகுறையாக செய்து அவதிப்படும் சூழ்நிலையும் உண்டு.

## ஹெரோயினுடன் மூவர்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு முன்பாகவுள்ள வியாபார நிலையமொன்றில் அவர்கள் சோதனையில் ஈடுபட்டதுடன், அவ்வியாபார நிலையத்தின் உரிமையாளரது தேக்கவத்தையிலுள்ள வீட்டிலும் சோதனையில் ஈடுபட்ட போதே, ஹெரோயினை மீட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர். இதன்போது வியாபார நிலைய உரிமையாளரான பெண் மற்றும் அவரது மகள்கள் கைது செய்யப்பட்டனர்.

## தீர்மானமிக்க பொறுப்பு... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்காக இளைஞர் யுவதிகள் முன்னெடுக்கும் பணிகள் தொடர்பில் நினைவுகூர்ந்த அவர், அதற்கான ஒத்துழைப்புகளுக்காகவும் நன்றி தெரிவித்தார்.

மேலும் சுபீட்சமான இலங்கையை கட்டியெழுப்ப அரசாங்கத்திற்கு நிலையான ஒத்துழைப்பை வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்வை ஏற்பாடு செய்வதமைக்காக பினூஜ அமரநாயக்க உள்ளிட்ட லியோ கழகத்தினருக்கு நன்றி கூறியதோடு, எதிர்காலத்தில் இளைஞர், யுவதிகளுக்கு இது போன்ற வாய்ப்புகள் அதிகளவில் உருவாகும் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

அதேபோல் நாட்டின் முன்னேற்றத்துக்காக இளைஞர், யுவதிகளின் பங்களிப்பை நேரடியாக பெற்றுத்தரும் லியோ கழகம் போன்ற வேலைத்திட்டங்களை ஊக்குவிக்கின்றமைக்காக பாடசாலை அதிபர்கள் உள்ளிட்ட கல்வித்துறைனருக்கும் பாராட்டு தெரிவித்தார்.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, இளைஞர் சேவை மன்றத்தின் தலைவர் / பணிப்பாளர் பசிந்து குணரத்ன, சர்வதேச லியோ கழகத்தின் செயற்றிட்ட ஆலோசகர் லசந்த குணவர்தன, அதிபர்கள், பிரதி அதிபர்கள், நிறைவேற்று ஆலோசகர்கள், லியோ கழகத்தின் ஆலோசகர்கள், பாடசாலைகளின் மாணவத் தலைவர்கள் உள்ளிட்டவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## நாரம்மல வாடிக்கை... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

இதன்படி, நாரம்மல பிரதேசத்திலுள்ள நுகர்வோர் மின் கட்டணத்தை டிஜிட்டல் வடிவில் குறுஞ்செய்தி அல்லது மின்னஞ்சல் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

அச்சடிக்கப்பட்ட மின் கட்டண பட்டியலில் வழங்கும் பாரம்பரிய முறையை நிறுத்தி புதிய டிஜிட்டல் அனுபவத்தை வழங்குவதே நோக்கமென இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது. இதற்கு எஸ்.எம்.எஸ். மூலம் பதிவு செய்ய மின் கட்டண பட்டியலின் கணக்கு எண்ணாக REG<space> என்று குறிப்பிட்டு 1987 என்ற எண்ணுக்கு அனுப்ப வேண்டும்

ஒன்லைனில் பதிவு செய்ய, e bill.ceb.lk இணையதளத்துக்குச் சென்று அதன் வழிமுறைகளை பின்பற்றவும். அதன்படி, வாடிக்கையாளர்கள் விரைவில் இபில்லிங் சேவைக்கு பதிவு செய்யுமாறு தெரிவித்துக்கொள்வதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மலையக மக்களின்.... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

விசேட அதிதிகளாக இந்திய பிரதித் தூதுவர் சத்யன்ஜல் பாண்டே, கண்டிக்கான இந்திய உதவித் தூதுவர் டாக்டர் எஸ்.ஆதிரா, சிறப்பு அதிதிகளாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவரும் ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவருமான மனோ கணேசன், தொழிலாளர் தேசிய சங்கத் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவுப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன், பாராளுமன்ற உறுப்பினர்களான வேலுகுமார் மயில்வாகனம் உதயகுமார் ஆகியோர் கலந்துகொள்வர்.

மலையகத்தில் பல்வேறு துறைகளிலும் சாதனை படைத்த 90 பேர் கௌரவிக்கப்படவுள்ளனர். கல்வி, கலை, கலாசாரம், பொறியியல், வைத்தியம், சட்டம், சமூகசேவை, ஊடகத்துறை, விளையாட்டு ஆகியவற்றில் உச்சம் தொட்டவர்களும் சுயதொழில் முயற்சியாளர்கள், இலக்கியத்துறை சார்ந்தவர்கள், எழுத்தாளர்கள், சிறந்த பெற்றோர் ஆகியோரும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அண்மையில் இந்தியாவின் சீ தமிழ் தொலைக்காட்சியில் சரிகமப நிகழ்வில் கலந்துகொண்டு இறுதிவரை பயணித்த மலையக மாணவி அசாணி விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார். கிரிக்கெட்டின் உலக சாதனை வீரர் முத்தையா முரளிதரன் சார்பாக அவரது தந்தை முத்தையா, தாய் லக்ஸ்மி முத்தையா ஆகியோர் அவருக்கான விருதை பெற்றுக்கொள்வர்.

கடந்த காலத்தில் மலையக மக்களின் பிரச்சினைகளையும் வெற்றிகளையும் உலகளவில் கொண்டுசென்ற ஊடகங்களுக்கும் விசேட விருதுகள் வழங்கப்படவுள்ளன.

## உறுதியான ஆதாரங்கள் இருப்பின்...

கட்சிகளும் கூச்சல் போடுவதால் அது நடக்காது. இந்த விவகாரத்தில் தற்போது சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

# கிழக்கின் குரல்



## பிரதேச மட்ட அரச அபிவிருத்தி செயற்பாடுகளை ஊடகமயப்படுத்த மாவட்ட செயலகம் நடவடிக்கை!!





(கல்லடி குறூப் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதேச மட்டங்களில் இடம்பெறும் அரச அபிவிருத்தி செயற்பாடுகளை ஊடக மயப்படுத்த மாவட்ட செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைவாக பிரதேச செயலக பிரிவுகளில் இடம்பெறுகின்ற அரச நிகழ்வுகள், அபிவிருத்தி செயற்பாடுகள், விழிப்புணர்வு நிகழ்வுகள் தொடர்பான செய்திகளை மாவட்ட ஊடகப் பிரிவிற்கு வழங்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளிக்கும் செயலமர்வு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே. முரளிதரனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் மாவட்ட தகவல் அதிகாரி வடிவேல் ஜீவானந்தனின் தலைமையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இடம்பெறும் நிகழ்வுகளை மாவட்ட ஊடகப் பிரிவிற்கு அறிக்கையிட நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கும், மாவட்ட செயலகத்தின் திணைக்களம் சார் செய்திகளை அறிக்கையிடும் உத்தியோகத்தர்களுக்கும் செய்தி சேகரித்தல், செய்தி தயாரித்தல், ஊடக நெறிமுறைகள், சமூக ஊடகங்களில் செய்தி அறிக்கையிடல், ஒலி, ஒளிப்பதிவு செய்தல் மற்றும் புகைப்படம் எடுத்தல் தொடர்பான வழிகாட்டல்கள், செயன்முறையுடன் கூடிய பயிற்சிகள் சிரேஷ்ட வளவாளர்களான ரூபவாஷனி கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட தயாரிப்பாளர் எம்.ஐ.ஜாபீர், விடிவெள்ளி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எம்.வீ.எம். பைறூஸ், றீம் ஸ்பேஸ் எக்கடமியின் ஊடக பணிப்பாளர் ஜஸ்மினா நவரெட்ணராஜா மற்றும் றீம் ஸ்பேஸ் எக்கடமியின் இணை பணிப்பாளர் ஆர்.எம்.பாஷீத் ஆகியோரினால் சிறந்த முறையில் வளவாண்மை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்விற்கு அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கிய மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்ஷினி ஸ்ரீகாந்த் கருத்து தெரிவிக்கையில் அரசின் விசேட நிகழ்வுகள், அபிவிருத்தி செயற்பாடுகளை மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் என்பவை தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களை மிகச்சரியாகவும், துல்லிமாகவும், உடனுக்குடன் வழங்க வேண்டும் அதற்காக அனைவரும் தங்களது பூரண ஒத்துழைப்பினை மாவட்ட செயலகத்திற்கு வழங்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

இச்செயலமர்வில் மாவட்ட செயலக பிரதம உள்ளக கணக்காய்வாளர் ஆர்.காயத்திரி, மாவட்ட செயலக நிருவாக உத்தியோகத்தர் கே.மதிவண்ணன்,

மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் ,மாவட்ட ஊடகப் பிரிவின் உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொணடனர்.

பயிற்சி செயலமர்வின் நிறைவில் பங்குபற்றிய உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் அதிதிகளினால் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சீரற்ற காலநிலையால் திருகோணமலை இலிங்கநகர் பாலமுருகன் ஆலயத்துக்கு சேதம்.!

(அன்புவழிபுரம் தினகரன் நிருபர் )



திருகோணமலை மாவட்டத்தில் கடும் மழை காரணமாக திருகோணமலை வரோதயநகர், புதுக்குடியிப்பு பகுதியிலும் திருகோணமலை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் வெள்ளநீர் வீடுகளுக்குள் புகுந்து மக்களின் இயல்புநிலையை பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

வரோதயநகர் அலஸ்தோட்ட வீதியால் வெள்ளநீர் வீதிக்கு மேல் பாய்கின்றது.

சீரற்ற காலநிலை காரணமாக திருகோணமலை இலிங்கநகர் பாலமுருகன் ஆலயத்தின் பின்புற மதில் இடிந்து வீழ்ந்துள்ளது.

இதனால் ஆலயத்திற்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

## களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தில் ஒளி விழா !

(காரைதீவு குறூப் நிருபர்)



மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக வருடாந்த ஒளி விழா நிகழ்வு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் நேற்றுமுன்தினம் (21)பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

அதிதிகளினால் மங்கல விளக்கேற்றதை தொடர்ந்து அருட்தந்தை ஜீ. அம்றோஸ் (புனித பிரான்சிஸ் அசிசீயார் தேவாலயம், குருக்கள்மடம்), அருட்திரு அ. நிரஞ்சன் (ஒளியேற்றும் உலக பணிச்சபை) ஆகியோரின் ஆசிச்செய்தியுடன் நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

பெரியகல்லாறு தூய அருளானந்தர் தேவாலய மாணவர்கள் மற்றும் தேற்றாத்தீவு புனித யூதா ததேயு தேவாலய மாணவர்களினால் கரோல் கீதம், நாடகம், நடனம் போன்ற பல கலைநிகழ்வுகள் ஆற்றுகை செய்யப்பட்டதுடன், பிரதேச செயலக உத்தியோகத்தர்களினால் பாடல்களும் இசைக்கப்பட்டது.

இதன் போது நத்தார் தாத்தா வருகையுடன், நிகழ்வுகளை ஆற்றுகை செய்த மாணவர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கான பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன், நிருவாக உத்தியோகத்தர் வே. தவேந்திரன், அலுவலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் உட்பட அலுவலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## மருதமுனை ஹிட்மா பாடசாலை மாணவன் சாதனை

(பெரியநீலாவணை விசேட நிருபர்)



மருதமுனை அல் ஹிக்மா ஜுனியர் பாடசாலை மாணவன் முஹம்மட் ஷாப் அண்மையில் வெளியான தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் 168 புள்ளிகளை பெற்று தனது பாடசாலைக்கும் பெற்றோருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

2023 ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையின் வெட்டுப் புள்ளிகள் அடிப்படையில் அம்பாறை மாவட்டத்திற்கான வெட்டுப்புள்ளி 145 ஆகும். முஹம்மட் ஷாப் 168 புள்ளிகளைப் பெற்று மருதமுனையில் மூன்றாவது இடத்தை பெற்றுள்ளார். இவர் நிந்தவூர் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் உமறுத்தீன் சஹதுனல் சஜீத், முஹம்மட் பாறுக் பாத்திமா சப்னா ஆகியோரின் சிரஸ்ட புதல்வராவார்.



காரைதீவு ஸ்ரீமன் நாராயணன் ஆலயத்தில் திருப்பாவை பூஜை மிகவும் சிறப்பாக நடைபெற்றுவருகின்றது. இதன் போது எடுக்கப்பட்ட படம்.

(படம் காரைதீவு குறூப் நிருபர்)

## மட்டக்களப்பில் 38 வது தேசிய மாணவர் சிப்பாய் படையணியின் நடை பவனி

பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

தேசிய மாணவர் சிப்பாய் படையணியின் 142 வருட நிறைவினை முன்னிட்டு வெள்ளிக்கிழமை(23.12.2023) மட்டக்களப்பில் தேசிய மாணவர் சிப்பாய் படையணியின் நடை பவனி இடம்பெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் வழிகாட்டலில் பாதுகாப்பு அமைச்சின் நிகழ்சி நிரலுக்கு அமைவாக தேசிய மாணவர் சிப்பாய் படையணியின் சிறப்பம்சங்களை வெறியுலகிற்கு வெளிப்படுத்தும் வண்ணம் தேசிய ரீதியில் இந்த கடெற் வோக் இடம்பெற்று வரும் நிலையில், மட்டக்களப்பில் 38 வது தேசிய மாணவர் சிப்பாய் படையணியின் நடை பவனி மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

38 வது தேசிய மாணவர் சிப்பாய் படையணியின் கட்டளைத் தளபதி லெப்டணன் கேணல் ஜீ.டபிள்யு.எச். நிலந்த தலைமையில் மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக ஆரம்பிக்கப்பட்ட நடை பவனி மட்டக்களப்பு அரசடி சந்திவரை சென்று அங்கு பாண்ட் வாத்திய அணியினர் மற்றும் மாணவர் படையணியின் அணிவகுப்பு மரியாதை என்பன இடம்பெற்றன.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஜே.ஜே.முரளீதரன் கலந்து கொண்ட நிகழ்வில், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வ.வாசுதேவன், பொலிஸ் உயர் அதிகாரிகள், கல்வி திணைக்கள அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நடைபவணியில் மட்டக்களப்பு மத்திய கல்லூரி, புனித மிக்கேல் கல்லூரி, மயிலம்பாவெளி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம், வின்சன்ட் உயர்தர மகளீர் தேசிய பாடசாலை, உள்ளிட்ட பாடசாலைகளை சேர்ந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## திறன் அபிவிருத்தி பிரிவின் தொழில் வழிகாட்டல் கலந்துரையாடல்

(தம்பலகாமம் குறூப் நிருபர்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் திறன் அபிவிருத்தி பிரிவின் தொழில் வழிகாட்டல் உப குழுவின் கூட்டமானது மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி தலைமையில் அண்மையில் மாவட்ட செயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டமானது மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜின் வழிகாட்டலில் மாவட்ட திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2024 ஆம் ஆண்டுக்கான தொழில் வழிகாட்டல் தொடர்பான பொது செயற்றிட்டமொன்றை உருவாக்குவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இக்கூட்டத்தில் கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்தின் வழிகாட்டல் ஆலோசனைக்குரிய உதவி கல்வி பணிப்பாளர், திருகோணமலை மாவட்டத்தின் வலயக் கல்வி அலுவலகங்களின் தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்கள் , ஆலோசனை வழிகாட்டல் உத்தியோகத்தர்கள், மாவட்டத்தின் தொழில் பயிற்சி நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், உயர்கல்வி நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகத்தின் துறைசார் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## 10வது ஆசிரியர் ஆய்வு மாநாடு



(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் ஆசிரியவாண்மை விருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் 10வது ஆசிரியர் ஆய்வு மாநாடு (21) நேற்று காத்தான்குடியிலுள்ள ஆசிரியவான்மை விருத்தி நிலையத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் அமீர் அவர்களின் வழிகாட்டலில் ஆசிரியவான்மை விருத்தி நிலையத்தின் இணைப்பாளர் ஏ.ரியாஸ் தலைமையில் ஆசிரியர் மாநாடு நடைபெற்றது. இதில் மட்டக்களப்பு மத்தி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.முபாஸ்தீன் காத்தான்குடி கோட்டக் கல்வி பணிப்பாளர் ஏ.ஜ.எம்.ஹக்கீம் திறந்த பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கே.ஞானரட்ணம் உட்பட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டில் பங்குபற்றிய ஆசிரியர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

## ஆரம்பப் பிரிவு வகுப்பறைகளுக்கான போட்டி

சாய்ந்தமருது கோட்டத்தினால் நடாத்தப்பட்ட ஆரம்பப் பிரிவு வகுப்பிலுள்ள தரம் 3, தரம் 4 வகுப்புகளுக்கான கோட்ட மட்ட கவின் நிலைப் போட்டியில் வெற்றிபெற்ற ஆசிரியைகளுக்கான கேடயங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் அண்மையில் நடைபெற்றது.

சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர் என்.எம்.ஏ. மலிக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அதிதிகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான பி. ஜிஹானா ஆலிப், எம்.எச். ரியாஸா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சிறந்த அரசியல் ஆளுமை கொண்ட ஒருவரை இழந்து விட்டோம்.

### முன்னாள் அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் இரங்கல்



எனது நீண்டகால நண்பரும் எல்லோருடனும் பண்பாக பேசும் குணம் கொண்ட கிழக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான நஜீப் ஏ மஜிட்டின் மரணச்செய்தியை கேட்டு மிகவும் கவலையடைந்தேன்.

கிழக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மர்ஹூம் நஜிப் ஏ மஜிட் ஆரம்பகாலத்திலிருந்து இன்று வரைக்கும் என்னோடு நெருக்கமாக பழகியவர். அன்னாரின் மறைவு கிழக்கு மாகாண மக்களுக்கு பெரும் இழப்பாகும். அன்னாரின் மறுவாழ்வு சிறப்பாக அமைந்து ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் உயர்ந்த சுவர்க்கம் கிடைக்க வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

மேலும் அவருடைய இழப்பினால் கவலையுற்றிருக்கும் அன்னாருடைய குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் மனஅமைதியை வழங்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

## மட்டக்களப்பு புனித சிசிலியா தேசிய மகளிர் கல்லூரியின் ஒளிவிழா







(மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்)

கிறிஸ்து பிறப்பை சிறப்பிக்கும் முகமாக மட்டக்களப்பு புனித சிசிலியா தேசிய மகளிர் கல்லூரியின் 2023 ஆண்டுக்கான ஒளி விழா நிகழ்வு பாடசாலை பிரதான மண்டபத்தில் கல்லூரிஅதிபர் அருட்சகோதரி நித்தாஞ்சலி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கல்முனை திரு.இருதயநாதர் ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை ஏ.தேவதாசன் மற்றும் வடக்கு கிழக்கு மெதடிஸ்த திருச்சபையின் தலைமை போதகர் கே.ஆர் அருள்ராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மாணவிகளின் வரவேற்பு நடனத்துடன், இயேசுவின் இறையாட்சியை வெளிப்படுத்தும் கரோல் இன்னிசை கீதங்களும், நடனம், கதை, போன்ற கலை நிகழ்வுகளும் மாணவிகளால் சிறப்பாக அரங்கேற்றப்பட்டதுடன், அதிதிகளினால் மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டன.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருந்த 412 குடும்பங்கள் வீடு திரும்பல்

(மாங்குளம் குரூப் நிருபர்)





முல்லைத்தீவு மாவட்டத்தில் 2327 குடும்பங்களைச் சேர்ந்த 6916 பேர் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 412 குடும்பங்களைச் சேர்ந்த 1215 பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் மழை சற்று குறைந்து வெள்ளநீர் வடிந்தோடியுள்ளமையால் ஏழு இடைத்தங்கல் முகாம்களில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டிருந்த 412 குடும்பங்களைச் சேர்ந்த 1215 பேரும் அவர்களது வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

அந்தவகையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட புளியங்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் அமைக்கப்பட்ட இடைத்தங்கல் முகாமிலிருந்த புளியங்குளம் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 6 குடும்பங்களைச் சேர்ந்த 24 பேரும், கருவேலங்கண்டல் அ.த.க பாடசாலையில் அமைக்கப்பட்ட இடைத்தங்கல் முகாமிலிருந்த பண்டாரவன்னி கிராம அலுவலர் பிரிவின் 63 குடும்பங்களைச் சேர்ந்த 201 பேரும் கருவேலங்கண்டல் கிராம அலுவலர் பிரிவின் 6 குடும்பங்களைச் சேர்ந்த 22 பேரும் கூழாமுறிப்பு அ.த.க பாடசாலையில் அமைக்கப்பட்ட இடைத்தங்கல் முகாமிலிருந்த கூழாமுறிப்பு கிராம அலுவலர் பிரிவின் 73 குடும்பங்களைச் சேர்ந்த 203 பேரும் முத்துஐயன்கட்டு வலதுகரை மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட இடைத்தங்கல் முகாமிலிருந்த முத்துவிநாயகபுரம் கிராம அலுவலர் பிரிவின் 37 குடும்பங்களைச் சேர்ந்த 104 பேரும் தட்டயர்மலை கிராம அலுவலர் பிரிவின் 18 குடும்பங்களைச் சேர்ந்த 50 பேரும் பேராறு தமிழ் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட இடைத்தங்கல் முகாமிலிருந்த பேராறு கிராம அலுவலர் பிரிவின் 24 குடும்பங்களைச் சேர்ந்த 70 பேரும் வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

இதேபோன்று மன்னாகண்டல் அ.த.க பாடசாலையில் அமைக்கப்பட்ட இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த மன்னாகண்டல் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 173 குடும்பங்களைச் சேர்ந்த 498 பேரும் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட கொக்குதொடுவாய் வடக்கு முன்பள்ளியில் அமைக்கப்பட்ட இடைத்தங்கல் முகாமிலிருந்த கொக்குதொடுவாய் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் பாதிக்கப்பட்ட 12 குடும்பங்களைச் சேர்ந்த 43 பேரும் நேற்றுமுன் (21) வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்

இவ்வாறான நிலையில் மாவட்டத்தில் அமைக்கப்பட்ட ஏழு இடைத்தங்கல் முகாம்களும் முழுமையாக அகற்றப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் வெளியிடப்பட்ட தகவலின் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவிலே அம்பாள்புரம், கரும்புள்ளியான், ஒட்டறுத்தகுளம், நட்டாங்கண்டல், பாண்டியன்குளம், செல்வபுரம், பாலிநகர், சிராட்டிகுளம், சிவபுரம், மூன்றுமுறிப்பு, பூவரசங்குளம், விநாயகபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 333 குடும்பங்களைச் சேர்ந்த 1076 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்தவகையில் மொத்தமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 2327 குடும்பங்களைச் சேர்ந்த 6916 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 32 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இடையிடையே மழை பெய்துவருகிறது. குறிப்பாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசசார்பற்ற நிறுவனங்கள், அமைப்புக்கள், தனிநபர்கள் என பல்வேறு தரப்பினரும் மக்களுக்கான அத்தியாவசியப் பொருட்கள் உலருணவு பொருட்களை வழங்கி வருகின்றனர்.

## வடக்கின் உதயம்

# தொண்டைமானாறு வாவியின் வான்கதவு திறப்பு



(கோப்பாய் குறூப் நிருபர்)



சீரற்ற காலநிலை காரணமாக தொண்டைமானாறு வாவியின் வான்கதவு திறக்கப்பட்டுள்ளன. கடந்த 12.12.2023 திகதியிலிருந்து 20.12.2023 வரையான காலப் பகுதியில் யாழ். மாவட்டத்தில் பெய்துவரும் கனமழை காரணமாக தொண்டைமானாறு வாவி நேற்று திறக்கப்பட்டுள்ளது.

கனமழை காரணமாக தேக்கி வைக்க முடியாத மேலதிக நீர் பெரும் கடற்பரப்பிற்குள் செல்வதற்கு திறந்து விடப்பட்டுள்ளது. நேற்று யாழ். மாவட்ட நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்களினால் தொண்டைமானாறு வாவி திறந்து விடப்பட்டது. வாவியில் மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

# மன்னார் - பேசாலை பொலிஸ் பிரிவில் விசேட சுற்றிவளைப்பு சோதனை

(மன்னார் குறூப் நிருபர் )



மன்னார் பேசாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்றையதினம் வெள்ளிக்கிழமை (22) காலை முதல் பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

பேசாலை பொலிஸ் பிரிவிலுள்ள வீடுகளுக்குச் சென்ற பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் போதைப்பொருள் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். பிரதி பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கமைவாக நாட்டிலுள்ள அனைத்து மாகாணங்களிலும் போதைப்பொருள் சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் பேசாலை பொலிஸ் பிரிவில் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மேலும் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றவர்கள் தொடர்பாகவும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதோடு சில போதைப்பொருட்களும் சோதனை நடவடிக்கையின் போது மீட்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.



தென்மராட்சி நாவற்குழி அரும்புகள் முன்பள்ளியின் வருடாந்த ஒளி விழா நிகழ்வுகள் நேற்று சான்றோர் சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.
(படம்; சாவகச்சேரி விசேட நிருபர்)

வாள்களுடன் கைதான

# சந்தேக நபருக்கு விளக்கமறியல்

(நாகர்கோவில் விஷேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்)

நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாலிசந்திப்பகுதியில் நான்கு வாள்களுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை எதிர்வரும் ஜனவரி மாதம் நான்காம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை உத்தரவிட்டார்.



நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை (21) மாலை விசேட அதிரடிப்படையினரினால் மாலிசந்திப்பகுதியில் நான்கு வாள்களுடன் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இவரை பொலிஸார் நேற்று வெள்ளிக்கிழமை (22) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது சந்தேகநபரை எதிர்வரும் நான்காம் திகதி வரை விளக்கமறையில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.




யாழ்.பொதுசன நூலகத்தின் ஏற்பாட்டில் கிறிஸ்மஸ் ஒளிவிழா நிகழ்வுகள் நேற்று யாழ்.பொதுசன நூலகத்தின் கேட்போர் கூடத்தில் யாழ்.மாநகர சபையின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எஸ்.அன்ரன் பிரான்சிஸ் தலைமையில் நடைபெற்றது.
(படம்; கோப்பாய் குறூப் நிருபர்)

# யாழில் கைதான தமிழக மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

(யாழ்.விசேட நிருபர்)

நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான 13 தமிழக கடற்றொழிலாளர்களுக்கும் 18 மாத சிறைத்தண்டனை விதித்த ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றம் அதனை 05 வருட காலத்திற்கு ஒத்திவைத்துள்ளது.

கடந்த 06ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பினுள் மூன்று படகுகளில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 13 தமிழக கடற்றொழிலாளர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மறுநாள், கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட வேளை அவர்களை நேற்றைய தினம் வியாழக்கிழமை வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது 13 கடற்றொழிலாளர்களுக்கு எதிரான மூன்று குற்றச்சாட்டுக்களுக்கு தலா 06 மாத சிறைத்தண்டனை விதித்த நீதிமன்றம் அதனை 05 வருட காலத்திற்கு ஒத்திவைத்தது.

# இரத்தினபுரி மாவட்டத்தில் அதிகரிக்கும் எலிக்காய்ச்சல் மரணங்கள்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)



எலிக்காய்ச்சல் மரணங்களில் இரத்தினபுரி மாவட்டம் முதலிடம் வகிப்பதாக இரத்தினபுரி மாவட்ட தொற்று நோய் வைத்திய அதிகாரி கசுன் வீரசூரிய நேற்று (22) ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டச் செயலாளர் வசந்த குணரத்தினவின் ஏற்பாட்டில் நடைபெற்ற மாவட்ட இணைப்புக் குழு கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயமாக அவர் தொடர்ந்து தகவல் தருகையில், இவ்வருடத்தில் மாத்திரம் இரத்தினபுரி மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் காரணமாக 10 பேர் மரணமடைந்துள்ளனர். இவர்களில் 8 பேர் இரத்தினக்கல் அகழ்வு பணிகளில் ஈடுபடுகின்றவர்கள். கடந்த பல வருடங்களாக எலிக்காய்ச்சல் காரணமாக இரத்தினபுரி மாவட்டத்திலேயே அதிகமானோர் பலியாகி வருகின்றனர்.

எனவே, இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபடுகின்றவர்களுக்கு எலிக்காய்ச்சல் தடுப்பு மருந்து வகைகளை விநியோகிக்க இரத்தினக்கல் அதிகாரசபையும் சுகாதார வைத்தியத்துறையும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என இதன்போது தெரிவித்தார்.

இவ்விடயத்தில் அதிக அக்கறையுடன் செயற்படுமாறு இரத்தினபுரி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அகில எல்லாவள இதில் கலந்து கொண்ட அனைத்து தரப்பினரையும் அறிவுறுத்தியுள்ளார்.

# கண்காட்சி நிகழ்வு

அறநெறி பாடசாலை மாணவர்களுக்கு முதல் தடவையாக மாணவர்களின் திறமையை வெளிக்காட்டு முகமாக மாபெரும் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எட்டியாந்தோட்டை சிவனருள் அன்னலட்சுமி அன்பு இல்லத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி மாபெரும் கண்காட்சி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக்கண்காட்சியில் சிறப்பு அதிதியாக பாரத தேசத்திலிருந்து வருகை தந்துள்ள வணக்கத்துக்குரிய திருக்கைலாய ஸ்ரீ கந்தப் பரம்பரை சூரியனார், கோயில் ஆதீன ஸ்ரீ கார்யம், அருட்குருநாதர் தவத்திரு சிவாக்கர தேசிக சுவாமிகள் கலந்து சிறப்பித்தார். சிவனருள் அமைப்பின் மாபெரும் கண்காட்சிக்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## மலைச்சாரல்

கருவேற்காடுபதி

# ஸ்ரீதேவி கருமாரியம்மன் தேவஸ்தான மஹா சக்திப்பூஜை

(பதுளை தினகரன் விசேட நிருபர்)

ஹல்துமுல்லை கருவேற்காடுபதி ஸ்ரீதேவி கருமாரியம்மன் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி ஸ்ரீ மஹா சக்திப்பூஜை வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது.

மஹா சக்திப்பூஜையில் ஐயப்ப சுவாமிகளின் பக்தர்கள் அனைவரும் கலந்து கொள்ளவுள்ளனர். அதனைதொடர்ந்து ஸ்ரீ தேவி கருமாரியம்மன் தேவஸ்தான உள்வீதி உலாவரும் திருக்காட்சிகள் இடம் பெறவுள்ளன. தேவஸ்தான பிரதம குரு பிரம்மஸ்ரீ பாலமூர்த்தீஸ்வரக் குருக்கள் தலைமையில் , மேற்படி பூஜை நிகழ்வுகள் முன்வைக்கப்படும்.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தேவஸ்தான பரிபாலன சபையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



வத்துகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த குமுக்கந்துறை அல் ஹிக்மா மகா வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் ஐவர் சித்தியடைந்துள்ளனர். ரிஸ்வி ருமானா (163), எம்.எச்.சஹாமா (160), எம்,எச்.எம். சாஹிட் (158) எம்,ஏ.எப். நுஹா (156), எம்,எம். சாஜித் (152) ஆகியோரைப் படத்தில் காணலாம்.

(படங்கள் : அக்குறணை குறூப் நிருபர்)

# இரத்ததான முகாம்

(அக்குறணை குறூப் நிருபர்)

கண்டி, குருதெனிய ஐக்கிய சமாஜ நலன்புரி சங்கம் நடாத்தும் இரத்ததான முகாம் இன்று 23ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

குருதெனிய பல்நோக்கு கட்டடத்தில் இன்று காலை 8.30 மணி முதல் பி.ப 3.30 வரை இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். எனவே இதில் இரத்ததானம் செய்ய விரும்புவோரை மேற்படி அமைப்பு அன்புடன் அழைக்கிறது.

# நகர்வலம்



## அநுராதபுரத்தில் பெய்த மழையால் பெரும் பாதிப்பு



திறப்பனை தினகரன் நிருபர்

கடந்த இரண்டு நாட்களில் அநுராதபுர மாவட்டத்தில் பெய்த பலத்த மழை மற்றும் பலத்த காற்று காரணமாக பல அனர்த்தங்கள் பதிவாகியுள்ளன. அனர்த்தங்களுக்கு உட்பட்ட இவர்கள் தம்புத்தேகம, மதவச்சிய, தலாவ, கலென்பிந்துனுவெவ, பதவிய மற்றும் நாச்சியாதுவ பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள். இவர்களில் 21 குடும்பங்களைச் சேர்ந்த 56 பேர் ஏற்பட்ட அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பிட்ட இந்த இரண்டு நாட்களில், 01 முழுமையான வீடும், பகுதி அளவில் 20 வீடுகளும், மற்றும் ஒரு வணிக இடமும் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தம்புத்தேகம பிரதேச செயலகப் பிரிவில் முற்றாக சேதமடைந்த வீட்டில் இருந்த 04 பேர் பாதுகாப்பான இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக அநுராதபுரம் மாவட்ட அனர்த்த நிவாரண அதிகாரி செல்வி கங்கா ஹேமமாலி தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட இந்த மக்களுக்கு தேசிய அனர்த்த நிவாரண சேவை மையம் சமைத்த உணவு மற்றும் உலர் உணவுப் பொருட்களை வழங்கி வருவதாக திருமதி ஹேமமாலி மேலும் தெரிவித்தார்.

## பாலர் பாடசாலைகளின் கலைவிழாக்களை பாரிய செலவில் நடத்துவதை தவிர்க்க பணிப்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

பெற்றோருக்கு பாரிய பொருளாதார நெருக்கடியை சுமத்தி நடத்தப்படும் பாலர் பாடசாலையின் ஆண்டு கலை நிகழ்ச்சிகளை எதிர்வரும் காலங்களில் வடமத்திய மாகாணத்தில் நடத்துவதை தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கான சுற்றுநிருபம் மாகாணத்தில் உள்ள சகல பாலர் பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் வடமத்திய மாகாண ஆரம்ப சிறுவர் கல்வி அபிவிருந்தி முகாமைத்துவ பணிப்பாளர் நிலந்த ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில் :

பாலர் பாடசாலைகள் எழுத்துக்கள் கற்பிக்கும் இடம் அல்ல. ஆனாலும் அறம் அல்லது பண்புடன் சிறுவர்கள் சந்திக்கும் இடமாகவும். நல்ல நடத்தையுடன் நற்குணம் கொண்ட ஒரு முதன்மையைப் பரிந்துரைக்கும் இடமாகும். இதனால் இசை அத்தியாவசியமற்றதாகும். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பெற்றோருக்கு இது பெரும் அழுத்தமும் சுமையுமாகும்.

பகலில் பாரியளவில் வெளிச்சம் ஒளிரவிடுதல், பாரியளவில் பணத்தைச் செலவிடுதல், கடுமையாக உரத்து ஒலிபரப்பு செய்தல், வீடீயோ, புகைப்படங்கள் மற்றும் ஆடைகள் முதலியவற்றுக்கு பெற்றோருக்கு சுமையை சுமத்தி இவ்வாறான கலை நிகழ்வுகளை நடத்துவது பாரிய அநீதியாகும். எனவே இது போன்ற நிகழ்வுகளை நடத்துவதை நிறுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

பெற்றோருக்கு சுமையை சுமத்தாமல் அடுத்து உதயமாகும் ஆரம்ப பிரிவுக்கான தயார்படுத்தலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும். சிறுவர் கலை விழாவை நடத்துவதற்கு அத்தியாவசியமாயின் சாதாரண அளவில் நடத்துமாறும் குறித்த சுற்றுநிருபத்தில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

வடமத்திய மாகாணத்தில் அநுராதபுரம் மாவட்டத்தில் 980 பாலர் பாடசாலைகளும் பொலன்னறுவை மாவட்டத்தில் 470 பாலர் பாடசாலைகளுமாக மாகாணத்தில் 1450 பாடசாலைகள் இருக்கின்றன. இதில் எந்த ஒரு பாடசாலையாவது விதிமுறைகளை மீறி செயல்படுமாயின் அந்த பாடசாலை தொடர்பில் தேவையான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.



வெளிநாடுவாழ் இலங்கை தமிழர்களின் அபிவிருத்தி சபையின் தலைவர் கிருஷ்ணமூர்த்தியை பிச்சைகிருஷ்ணா சந்தித்து கொழும்பில் நடைபெறயிருக்கும் ஐயப்ப பூஜைக்கு அழைப்பிதழ் வழங்கிய போது பிடிக்கப்பட்ட படம். இலங்கை, இந்திய தொடர்பாளர் மணவை அசோகனும் அருகில் உள்ளார்.

## ஆமைக் குஞ்சுகள் கடலில் விடப்பட்டன

கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்



கண்டகுழி வனஜீவராசிகள் திணைக்களத்தினரினால் பராமரிக்கப்பட்டு வந்த ஆமைக் குஞ்சுகள் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளினால் கடலில் விடுவிக்கப்பட்டன.

கண்டகுழி கடற்கரையில் இடப்படும் முட்டைகளை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் பாதுகாப்பாக சேகரித்து ஆமைக் குஞ்சுகளாக மாறிய பின்னர் கடற்கரையில் விடுவிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த மாதம் ஆமை முட்டைகளை சேகரித்து பராமரிப்பு நிலையத்தில் வைக்கப்பட்டு 45 நாட்களின் பின்னர் முட்டையிலிருந்து 27 ஆமைக் குஞ்சுகள் வெளியில் வந்ததாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.



இதன்போது நேற்று முன்தினம் மாலை வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் ஆமைப் பராமரிப்பு நிலையத்திற்குச் சென்று குறித்த ஆமைக் குஞ்சுகளை பாதுகாப்பாக கடலில் விட்டனர்.

குறித்த கடலாமை அரியவகையான (Olive Ridley) மஞ்சள் நிறச் சிற்றாமை வகையைச் சார்ந்தது என கற்பிட்டி வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.









கமலகண்ணன் ருக்மனன் லோகேஸ்வரன்,சந்தனராஜ் தர்மராஜ், கதிரேசன் புஸ்பகாந்தன், மகேஸ்வரன் சுகிகரன் ஆகியோருக்கு புதிய ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவரும் முன்னாள் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான ரவிகுமாரின் சிபார்சுக்கு அமைய அகில இலங்கை சமதான நீதவான் நியமனக் கடிதம் வழங்கப்பட்டபோது....

## கெக்கிராவ மல்தெனிபுர பகுதியில் புதையல் தோண்டிய ஆறுபேர் கைது

அநுராதபுரம் தினகரன் நிருபர்

கெக்கிராவ மல்தெனிபுர பகுதியில் புதையல் தோண்டிய சம்பவத்துடன் தொடர்புடைய முன்னாள் இராணுவ சிப்பாய் உள்ளிட்ட ஆறு பேரை கெக்கிராவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய 21 ஆம் திகதி அதிகாலை கெக்கிராவ பொலிஸ் பிரிவின் மல்தெனிபுர பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போது புதையல் தோண்டிக்கொண்டிருந்த சந்தேக நபர்கள் ஆறுபேரை கைதுசெய்துள்ளதுடன் புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய உபகரணங்கள் சிலவற்றையும் கெக்கிராவ பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 35,42,47,53,55,58 வயதுடைய கெக்கிராவ மல்தெனிபுர, ஆண்டியாகல, தம்பேவட்டவன, கலேவல பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கெக்கிராவ பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் ஆறு பேரும் கெக்கிராவ நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### தினகரன், வாரமஞ்சரி ஊடக அனுசரணையுடன்

## 28ஆம் திகதி திரைக்கு வருகிறது சங்கவி பிலிம்ஸின் "மயிலாஞ்சி"




கலாவிபூஷணன் விருது வழங்கி கலைஞர்களையும் சமூக சேவையாளர்களையும் கௌரவித்து வருகின்ற சங்கவி பிலிம்ஸ் நிறுவனமும் சங்கவி தியேட்டரும் புதிய படமொன்றை திரையிடவுள்ளது. தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் இத்திரைப்படம் திரையிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக இந்தத் திரைப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. "மயிலாஞ்சி" என்ற மலையாளப் பெயரில் தயாரிக்கப்பட்டுள்ள இத்திரைப்படம் எதிர்வரும் 28ஆம் திகதி உலகம் முழுவதிலும் திரையிடப்படவுள்ளதுடன் இலங்கையில் 40 திரையரங்குகளில் திரையிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## "தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள்" 64ஆவது மேடை நிகழ்ச்சி

புதுவருடத்தை முன்னிட்டு மீண்டுமொரு இதமான இடைக்கால முத்தான பாடல்களின் கோர்வையில் கவிக்கமல், பாசில், இணைந்து வழங்கும் "அக்ஷரா" "வீனஸ்" இசைக் குழுவினர்களின் "இனிய இசையில் இலங்கையின் முன்னணி பாடக பாடகிகளான கவிக்கமல், பாசில், பவானி, கீதா, சான், ஜெயமோகன், டாக்டர் ஜமீல்,கலந்து சிறப்பிக்கும் "தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள் " இன்னிசை மாலை, எதிர்வரும் ஜனவரி 07ஆம் திகதி ஞாயிறு மாலை 5.00 மணிக்கு கொழும்பு 07. பொது நூலகத்தில் அமைந்துள்ள பொது நூலக மண்டபத்தில் மிக கோலாகலமாக நடைபெறுகிறது.

இலக்கியங்களின் அடைக்கலம் புரவலர் ஹாசிம் உமர் தலைமை தாங்கி கலந்து சிறப்பிக்கும் இந்த இந்த இசைமேடையில், கொழும்பு நகரசபை உறுப்பினரும், சமூகசேவையாளருமான கலைஞர் ஜோசப் பெர்னாண்டோ முன்னிலை வகிக்கிறார். K .A.A.S Marketing உரிமையாளர் தேசமான்ய தேசகீரத்தி வியாபார விபூசன ஜனாப் மௌசும் ஜிப்ரி பிரதம அதிதியாகக் கலந்து நிகழ்வினைச் சிறப்பிக்க இருக்கின்றார்.

இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர் கலந்து கொள்கிறார்.

விஷேட அதிதியாக அமெரிக்காவின் உலக தமிழ் கலை பண்பாட்டுக் கலைக்கூடத்தின் சர்வதேச தலைவர் டாக்டர் எஸ். எம். ரஸ்மி ரூமி, கொழும்பு பிரதிமேயர் கௌரவ எம்.ரி. எம் இக்பால் அதிதியாக கலந்து கொள்கிறார். இசைநிகழ்விற்கு சிறப்பதிகளாக தொழிலதிபர் ஜனாப் பீ. எம். ரமீஸ் மொஹமட், சமூக சேவையாளர் ஜனாப் ஹசன் முபாறக் , சமூக சேவையாளர் SH Colour house ஜனாப் சாஜஹான், கலைஞர் எம். என். நசார், தொழிலதிபர் எம். என். எம். ரபீக் சமூக சேவையாளர் யாசீன் அஹமட், சமூக சேவையாளர் கொழும்பு நகர சபை உறுப்பினர் எம். பி. சுதர்சன், டச் என் டச் சேதுராஜா, சமுகசேவையாளர் சமன்குமார், வசந்தம் எப். எம். முகாமையாளர் லெட்சுமணன் கிருபாகரன் கலந்து கொள்கிறார்கள்.

அதிதிகளாக மக்கள் நலன் சம்மேளன தவிசாளர் ஜனாப் அஸீஸ் லக்கானா, கலைஞர் ஏ. ரவீந்திரன், தொழிலதிபர் ஏ. எல். எம் உவைஸ், திருமதி கௌசலாதேவி கோவிந்த பிள்ளை, கவிஞர் திலகம் பிரேமராஜ், தொழிலதிபர் இராமசாமி சதானந்தன், தேசமான்ய குருசாமி பிச்சைக்கிருஷ்ணா, குருசாமி புவனேஸ்வரன்,




கலைஞர் சண்மு, திருஓவியநாதன், ஜனாப் எஸ். எம். வாஜிட் அலி, தங்கவேல் யோகராஜன், கலைஞர் அஸீம்தீன், கவிஞர் தனபாலன் , கவிஞர் கலாநிதி ஜனாப் அப்துல் அஸீஸ், மற்றும் தெகிவளை நகரசபை உறுப்பினர் முஸ்தபா ஷரீனா கலந்து கொள்கிறார்கள்.

கலை அதிதிகளாக கலைஞர் ராதா மேத்தா, கலைஞர் இளங்கோ, இளநெஞ்சன் முர்சிதீன், கலாபூசணம் மொஹமட் அலி, இசையமைப்பாளர் எம். ரி. தவராசா, பாடகர் இசையமைப்பாளர் முபாறக் இல்யாஸ், சிரேஷ்ட ஊடகவியலாளர் முனைவர் கே. ஈஸ்வரலிங்கம், கவிஞர் ஈழகணேஸ், கவிமணி நஜ்முல் ஹுசைன், கவிஞர் பிரேம்ராஜ், யாழ். அசீம், தமிழ் தென்றல் அலிஅகபர், மற்றும் கலைஞர் பொன்பத்மநாதன் ஆளுமைகள், கவிஞர்கள் ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், தொழில் அதிபர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து சிறப்பிக்கும் இந்நிகழ்வை இலவசமாக கண்டுகளிக்க அன்புடன் அழைக்கிறார்கள் விழா ஏற்பாட்டாளர்கள். நிகழ்ச்சி தொகுப்பு கலைஞர் பி. எம். நந்தகுமார்.

இந்நிகழ்ச்சியில் கலைஞர்களை ஊக்குவிக்கும் "வாழ்வோரை போற்றுவோம்" வரிசையில் இம்முறை தேசமான்ய தேசகீரத்தி, தேசசக்தி, லங்காபுத்ர மௌசும் ஜிப்ரி கௌரவிக்கப்படவுள்ளார்.

இந் நிகழ்ச்சிக்கான ஊடக அனுசரணை வசந்தம் எப். எம். தினகரன் பத்திரிகை, தினகரன் வாரமஞ்சரி, மொஹபத் tv , அக்ஷரா தமிழ் வழங்குகின்றன.


# தங்க விருதை வெற்றி பெற்ற Ocean Lanka




இலங்கை தேசிய ஏற்றுமதியாளர்கள் சபையினால் (NCE) ஏற்பாடு செய்யப்பட்ட, 31ஆவது வருடமாக இடம்பெறும் ஏற்றுமதி விருதுகள் 2023 இல், ஏற்றுமதியாளர்களுக்கான விநியோகஸ்தர்கள் (Suppliers to Exporters Sector) பிரிவின் "Extra Large" எனும் பிரிவில், இலங்கையின் மிகப் பெரிய நெசவுத் துணி உற்பத்தியாளரான Ocean Lanka (Pvt) Ltd நிறுவனம் தங்க விருதைப் பெற்றுள்ளது. இந்த விருதானது, நிறுவனத்தின் சிறப்பான அர்ப்பணிப்பு மற்றும் பங்களிப்புகளை அங்கீகரிப்பதோடு, நெசவுத் துணி உற்பத்தியில் சிறந்து விளங்குதல், குழுப்பணி மற்றும் புத்தாக்கத்தில் அதன் அர்ப்பணிப்பை எடுத்துக் காட்டுகிறது.

ஏற்றுமதித் துறையில் சிறந்த செயற்பாடுகளை அங்கீகரிக்கும், இலங்கை வர்த்தகத்துறை நாட்காட்டியின் முதன்மையான நிகழ்வான NCE ஏற்றுமதி விருதுகள் (NCE Export Awards), அதன் 31ஆவது பதிப்பைக் கொண்டாடியது. இந்த விருதுகள், மேம்பட்ட உலகளாவிய பார்வையை ஏற்படுத்தும் நுழைவாயிலை அமைக்கவும், இலங்கை அரசாங்கத்தின் பொருளாதாரக் கருத்துக்களுடன் இணங்கி, வணிகத்தின் வெற்றியின் முக்கிய தூண்களான மக்கள், இலாபம், பூகோளம் ஆகியவற்றையும் வலியுறுத்துகின்றன. இந்த பாராட்டுகள் வெறும் கௌரவங்களுக்கு அப்பாற்பட்டு, ஏற்றுமதியாளர்கள் முக்கிய இடத்தை பெறவும் அவர்கள் பல்வேறு சர்வதேச சந்தைகளை அணுகவுமான வாய்ப்புகளை ஏற்படுத்துகின்றன.

# பெந்தோட்டை EKHO Surf மூலமாக சமுத்திரத்தின் தங்குதடையற்ற காட்சியை தனித்துவமாக அனுபவித்து மகிழ்வதற்கான வாய்ப்பு



புனரமைப்புப் பணிகளுக்குப் பிறகு முற்றிலும் புதிய பொலிவுடன் காட்சியளிக்கும் பெந்தோட்டை EKHO Surf, அதன் தனித்துவமான, விசாலமான மற்றும் தங்குதடையற்ற சமுத்திரக் காட்சியை அனுபவிக்குமாறு பிரயாணிகள், விடுமுறையில் செல்பவர்கள் மற்றும் சமுத்திரத்தை நேசிப்பவர்களுக்கு அழைப்பு விடுகின்றது. அண்மையில் உத்தியோகபூர்வமாக மீளவும் திறந்து வைக்கப்பட்டுள்ள இந்த ஹோட்டல் டிசம்பரில் சுற்றுலாப் பருவத்தின் உச்சியில், மிகவும் நேர்த்தியான தருணமொன்றில், இலங்கையின் அழகிய கடற்கரை அழகின் குன்றாத மகிமையுடன், நெகிழ்திறன் மற்றும் பரிமாணத்தின் வரலாறாக தலைநிமிர்ந்து நிற்கின்றது.

தகதகவென மின்னும் சூரிய அஸ்தமனம், பஞ்சைப் போன்ற மணல், நன்கு இட வசதிகள் கொண்ட அறைகளுடன் பரந்த புல்வெளி, புத்தம்புதிய கடலுணவு வகைகள் ஆகியவற்றைக் கொண்ட EKHO Surf, உண்மையில் வெப்பமண்டலத்திலிருந்து சற்று விலகி, ஓய்வாக பொழுதைப் போக்க இடமளிக்கின்றது.

1972 ஆம் ஆண்டிலிருந்து இயங்க ஆரம்பித்து, செழிப்பான வரலாற்றைக் கொண்ட ஹோட்டலின் சிறப்பு தொடர்ந்து மேம்பட்டதுடன், EKHO Surf இன் பயணம் அன்பின் உழைப்பினால் ஆனது. வெறுமனே ஒரு ஹோட்டலைத் தோற்றுவிப்பது என்பதற்கும் அப்பால், இலங்கையின் அழகு மற்றும் அரவணைப்பு ஆகியவற்றை வெளிப்படுத்தி, அதில் திளைக்கச் செய்யும் அனுபவத்தை வழங்குகின்றது.



# LOVOL ஹார்வெஸ்டருக்கான சிறந்த விற்பனைக்கு பிந்திய சேவை வழங்கும் DIMO



DIMO Agribusinesses ஆனது, அதன் LOVOL ஹார்வெஸ்டருக்கு வழங்கப்படும் தனித்துவமான விற்பனைக்குப் பின்னரான சேவையின் மூலம், இலங்கையின் விவசாயிகள் மத்தியில் மிகவும் பிரபலமடைந்துள்ளதன் மூலம், கடந்த போகத்தில் LOVOL இன் சந்தைப் பங்கை இரட்டிப்பாக்க முடிந்துள்ளது.

இலங்கையின் விவசாயத் துறையில் இயந்திரமயமாக்கலை ஒரு புதிய நிலைக்கு கொண்டு செல்லும் வகையில், DIMO விவசாயப் பிரிவான DIMO Agribusinesses ஆனது, LOVOL அறுவடை இயந்திரத்தை (LOVOL Harvester) அறிமுகப்படுத்தியுள்ளதன் மூலம், விவசாயிகளுக்கு அவர்களது அறுவடைக் கனவுகளை நனவாக்கும் வாய்ப்பை வழங்கியுள்ளது.

அவர்களது வீடுகளுக்கே சென்று பராமரிப்புச் சேவைகளை வழங்கியதோடு, தேவையான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. அத்துடன் இங்கு, பராமரிப்பு சேவைப் பணிகளுக்குத் தேவையான உதிரிப் பாகங்களை கொள்வனவு செய்யும் போது விசேட தள்ளுபடியும் வழங்கப்பட்டது.

# சாதனைகளுடன் கால் நூற்றாண்டை பூர்த்தி செய்த Variosystems Sri Lanka



இலங்கையில் 25 ஆண்டுகால ஒப்பிட முடியாத சிறப்பான சேவையுடன் சிறந்து விளங்கும் Variosystems, அதன் அர்ப்பணிப்பைக் குறிக்கும் வகையில், படல்கமவில் அமைந்துள்ள அதன் 3ஆவது அதிநவீன உற்பத்தி நிலையத்தின் திறப்பை பெருமிதத்துடன் அறிவிக்கிறது. இந்த மைல்கல்லானது, புத்தாக்கம், நிலைபேறானதன்மை மற்றும் செயற்பாட்டுச் சிறப்பு ஆகியன தொடர்பான நிறுவனத்தின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை கோடிட்டுக் காட்டுகிறது.

இந்த திறப்பு விழாவில் கருத்து வெளியிட்ட, Variosystems நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி Stephan Sonderegger, "படல்கம உற்பத்தி நிலையமானது எமது தூரநோக்கின் மையப் பகுதியாகும். 'முன்னணி புத்தாக்க கண்டுபிடிப்பாளர்களை இணைந்து உருவாக்குதல்' எனும் எமது குறிக்கோளுக்கு அமைவான இந்த வசதி விரிவாக்கத்தின் மூலம், வளர்ந்து வரும் ஆசிய சந்தையிலும் உலகளாவிய இலத்திரனியல் விநியோக சங்கிலியிலும் எமது இருப்பை வலுப்படுத்துகிறோம்." என்றார்.

Variosystems Sri Lanka வின் புதிய அதி நவீன கட்டடமானது, உற்பத்தி திறன்களில் ஒரு முன்னேற்றத்தை பிரதிபலிக்கிறது. படல்கமவில் அமைந்துள்ள இந்த அதிநவீன தொழிற்சாலையானது, 30,000 சதுர மீற்றர் பரப்பளவில், நிறுவனத்தின் உற்பத்தித் திறனை இரட்டிப்பாக மாற்றுகிறது.

# உள்ளூர் சமூகங்களுக்கு உதவிக்கரம் நீட்டும் Lanka Spice



இலங்கையின் புகழ்பெற்ற வர்த்தக நிறுவனமான Lanka Spice (Pvt) Ltd, 'Senehase Dath' (அன்பின் கரங்கள்) எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் சமூகப் பொறுப்புணர்வை நோக்கி ஒரு குறிப்பிடத்தக்க படியை எடுத்துள்ளது. கல்வியை ஆதரிப்பதில் விசேட கவனம் செலுத்தி, சமூகத்திற்கு அர்த்தமுள்ள வழிகளில் மீளக் கொடுப்பதில் நிறுவனத்தின் உறுதிப்பாட்டை இந்த திட்டம் பிரதிபலிக்கிறது.

'Senehase Dath' நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வானது, அண்மையில் அத்துருகிரிய, மே.மா /ஜயா / மகாமத்திய வித்தியாலயத்தில் இடம்பெற்றது. Mc Currie நிர்வாகம், பாடசாலை நிர்வாகத்துடன் இணைந்து, தரம் 6 முதல் 9 வரையிலான தகுதியான மாணவர்கள் குழுவை அடையாளம் கண்டு, இந்த மாணவர்களுக்கு அவர்களின் கற்றல் பயணத்தை எளிதாக்கும் வகையில், அத்தியாவசிய கற்கைக்கான பொருட்கள் அடங்கிய, தொகுக்கப்பட்ட பரிசுப் பொதிகளை வழங்கியது. அத்துருகிரிய மகாமத்திய வித்தியாலய அதிபர் எச்.ஏ. காமினி ஜயரத்ன தெரிவிக்கையில், "Lanka Spice நிறுவனத்தின் இந்த ஆற்றல்மிக்க செயலை நான் மிகவும் நன்றியுணர்வோடு பாராட்டுகிறேன். கடுமையான நிதி நிலைமைகளுடன் போராடும் குடும்பங்களைச் சேர்ந்த எமது பாடசாலையைச் சேர்ந்த பல மாணவர்களின் கல்விக்கு இது உறுதுணையாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.." என்றார்

# பண்டிகையில் தமது வாடிக்கையாளர்களுக்கு பிரத்தியேக சலுகைகளை வழங்கும் HNB



இலங்கையின் முன்னணி தனியார் துறை வங்கியான HNB, இந்த பண்டிகைக் காலத்தில், #Happyisnow மூலம் பல தனித்துவமான சலுகைகளை வழங்கி, அதன் கார்ட் உரிமையாளர்களுக்கு மீண்டும் மகிழ்ச்சியை அளித்துள்ளது.

HNB தனது வரவு மற்றும் கடன் அட்டை உரிமையாளர்களுக்கு 12 நவம்பர் 2023 முதல் 31 டிசம்பர் 2023 வரை சலுகைகளை வழங்குவதற்காக இலங்கையின் முன்னணி வாடிக்கையாளர் விற்பனை நிலையங்கள், நகைகள் மற்றும் eCommerce பிராண்டுகள் மற்றும் பிரபலமான உணவகங்கள், பல்பொருள் அங்காடிகள், ஹோட்டல்கள் மற்றும் பாடசாலை உபகரண விற்பனை நிலையங்கள் உட்பட 300 க்கும் மேற்பட்ட விற்பனை நிலையங்களுடன் கூட்டு சேர்ந்துள்ளது.

இதன்படி 75% தள்ளுபடி மற்றும் கூடுதல் கட்டணங்கள் இல்லாமல் மாதாந்திர தவணை திட்டங்களுடன் கவர்ச்சிகரமான சலுகைகளும் வழங்கப்படும். இது குறித்து கருத்து தெரிவித்த HNB கார்ட் பிரிவின் தலைவர் திருமதி கௌதமி நிரஞ்சன், இந்த கிறிஸ்மஸ் பருவ காலத்தில் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு மதிப்புமிக்க பரிசாக சிறப்பு கிரெடிட் மற்றும் டெபிட் கார்ட் சலுகைகளை வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ஒவ்வொரு விடுமுறையின் ஒவ்வொரு தருணத்தையும் மறக்க முடியாத அனுபவமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

# இலங்கை ஆடை உற்பத்தி துறையின் பல்வேறு நிலைகளை மேம்படுத்த அரசாங்கக் கொள்கையும் ஆதரவும் அவசியம்



முன்னேற்றத்தின் பல்வேறு நிலைகளைக் கட்டுப்படுத்துவதற்கான முக்கியத்துவத்தை வலியுறுத்தி, இலங்கையின் ஜவுளித் தேவையில் 50% 60% இறக்குமதி செய்யப்படுவதாக ஜவுளி மற்றும் ஆடைத் துணை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் (FAAMA) தலைவர் சஹான் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கையின் ஜவுளி மற்றும் ஆடை உபகரண உற்பத்தியாளர்களின் வழிகாட்டி அமைப்பான FAAMA, கூட்டு ஆடைச் சங்கங்களின் மன்றத்தின் (JAAF) துணை அமைப்பாகும். 40க்கும் மேற்பட்ட உறுப்பு நிறுவனங்களைக் கொண்ட இந்தச் சங்கம், ஆடைத் துறையின் விநியோக சங்கிலிக்கான ஒருங்கிணைந்த குரலாக செயல்படுகிறது. ஜவுளி மற்றும் ஆடை உபகரண உற்பத்தியாளர்கள் வாய்ப்புகளை அடையாளம் காணவும், போக்குவரத்து, கொள்கைகள் மற்றும் உள்கட்டமைப்புகளை மேம்படுத்தவும் இணைந்து பணியாற்றுவதற்கு FAAMA உதவுகிறது.

உள்நாட்டு தொழிற்சாலைகளுக்குள் விநியோக சங்கிலிகளை உட்புகுத்துவது தயாரிப்பு நேரத்தை குறைக்கவும், ஏற்கனவே செங்குத்துச் சேர்க்கையை (Vertical Integration) கொண்டுள்ள நாடுகளுடன் இலங்கை போட்டியிடவும் உதவும் என்று ராஜபக்ஷ வலியுறுத்தினார்.

# பண்டிகையில் உங்கள் குழந்தைகள் மீதான அன்பை வெளிப்படுத்த சிறந்த வழி



உங்களை மதிக்கும் SDB வங்கியானது, இப்பண்டிகைக் காலத்தில் SDB லக்தறு குழந்தைகள் சேமிப்பு கணக்கினை மேம்படுத்துவதற்காக எண்ணிய பிரசாரத்தினை வெளியிட்டுள்ளது. "எங்கே எனது நத்தார் தாத்தா" எனத்தலைப்பிடப்பட்டுள்ள இப்பிரசாரமானது, நீண்ட காலத்திற்கு நிலைத்துநிற்காத விளையாட்டுப் பொருட்களிலும் பரிசுப்பொருட்களிலும் செலவழிப்பதினை காட்டிலும் அவர்களது குழந்தைகளது எதிர்காலத்திற்காக பணத்தினை சேமிப்பதற்கு பெற்றோர்களை ஊக்குவிப்பதாக அமைகின்றது.

கிறிஸ்துமஸ் என்பது மகிழ்விற்கும் கொண்டாட்டத்திற்குமான காலம் எனினும் இதுவே செலவழிப்பதற்கும் விரயமாக்குவதற்குமான காலமாகவும் காணப்படுகின்றது. பல பெற்றோர்கள் நீடித்த பாவனையற்றதும் எந்தவொரு கல்விப் பெறுதியுமற்றதுமான விளையாட்டுப் பொருட்களையும் பரிசுப் பொருட்களையும் தங்களது பிள்ளைகளிற்கு வாங்கித்தரவே எண்ணுகிறார்கள். ஆகவே, இப்பண்டிகைக் காலத்தில் உங்களது குழந்தைகள் மீதான அன்பையும் அரவணைப்பையும் வெளிப்படுத்த சிறந்தவொரு வழி காணப்படுவதனை பெற்றோருக்கு நினைவுப்படுத்த இதுவொரு முக்கியமான காலமென SDB வங்கி அடையாளப்படுத்தியுள்ளது.

# மிகப் பெரிய ஆடையகத்தை வத்தளையில் திறந்து வைத்த GFlock



இலங்கையின் மிகப் பெரிய தைத்த ஆடையகமான GFlock, ஒரே வர்த்தக நாமத்தின் கீழ் அதன் மாபெரும் காட்சியறையை வத்தளையில் (20) திறந்து வைத்துள்ளது. அதன் தலைவர் ரணில் வில்லத்தரகே தலைமையில் இத்திறப்பு விழா இடம்பெற்றது.

வாடிக்கையாளர்களுக்கு தைத்த ஆடைத் துறையில் புத்தாக்கமான அனுபவத்தை வழங்குவதற்காக நவீன வசதிகள் மற்றும் நவீன நாகரீக ஆடைகளையுடன், அதன் மிகப் பெரிய காட்சியறை திறந்து வைக்கப்பட்டுள்ளது. உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் நுகர்வோர் மத்தியில் புகழ்பெற்ற, முதலிடத்தில் உள்ள தைத்த ஆடைகளின் உள்ளூர் வர்த்தக நாமமான GFlock, தனது கிளை வலையமைப்பை விரிவுபடுத்தி, ஆறு மாதம் எனும் சிறிய காலப்பகுதிக்குள் தனது இரண்டாவது கிளையை திறந்துள்ளது.

பாரம்பரியத்திற்கு அப்பாற்பட்ட சமீபத்திய நாகரீகத்தில் அமைந்த, பல்வேறு வடிவமைப்புகளில் அமைந்த தெரிவுகளில் இருந்து வாடிக்கையாளர்கள் தமது தெரிவுகளை கொள்வனவு செய்ய இங்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

நவீன வடிவமைப்புகளுடன் உயர்தர மூலப்பொருட்கள் மூலம் இத்தயாரிப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

# மெர்தேகா கிண்ணம் 2023 இல் அமானா வங்கியின் தில்ஷாட் ஹமீட்



மலேசியாவில் நடைபெற்ற மெர்தேகா கிண்ணம் 2023 டேபிள் டெனிஸ் போட்டியில் பங்கேற்றிருந்த இலங்கை வர்த்தக டேபிள் டெனிஸ் சம்மேளன அணியில் அமானா வங்கியின் ஊழியரான தில்ஷாட் ஹமீட் அங்கம் வகித்திருந்தார்.

வங்கியின் கட்டுகஸ்தோட்டை கிளையின் உதவி முகாமையாளராக கடமையாற்றும் தில்ஷாட் ஹமீட், வர்த்தக போட்டித் தொடர்களில் வங்கியின் சார்பில் பங்கேற்று, தமது திறமையை வெளிப்படுத்தி பல சம்பியன்ஷிப்களை வெற்றியீட்டியுள்ளார்.

அமானா வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி இம்தியாஸ் இக்பால் கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கை மற்றும் அமானா வங்கியை பிரதிநிதித்துவப்படுத்தி மெர்தேகா கிண்ணத்தில் பங்கேற்றிருந்த தில்ஷாட் எய்தியுள்ள சாதனைகள் தொடர்பில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். வங்கி எனும் வகையில், வங்கியினுள் விளையாட்டு திறமைசாலிகளை ஊக்குவிப்பதற்காக எம்மை அர்ப்பணித்துள்ளதுடன், கிரிக்கட், உதைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் மற்றும் டெனிஸ் போன்ற பல வர்த்தக விளையாட்டுச் செயற்பாடுகளில் அதன் சிறப்பை எம்மால் அவதானிக்க முடிந்துள்ளது." என்றார்.

# கழகப் போட்டிகளில் களமிறங்குகிறார் தனுஷ்க



இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்க மீது விதிக்கப்பட்ட தடையை சிங்கள கிரிக்கெட் கழகத்தின் (எஸ்.எஸ்.சி) கிரிக்கெட் குழு மற்றும் நிறைவேற்றுக் குழு நீக்கியுள்ளது.

இந்தத் தடை உடன் அமுலுக்கு வரும் வகையில் நீக்கப்படுவதாக அந்தக் கழகம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபையினால் ஏற்பாடு செய்யப்படும் பிரதான கழகமட்ட மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் தொடரில் தனுஷ்க குணதிலக்கவால் விளையாட முடியும் என்று எஸ்.எஸ்.சி மேலும் தெரிவித்துள்ளது. அவுஸ்ரேலியாவில் பெண் ஒருவர் மீது பாலியல் தாக்குதலில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்ட தனுஷ்க குணதிலக்க சிட்னியில் உள்ள டோனிங் சென்டர் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதியை மாத்திரம் கொண்ட வழக்கு விசாரணைக்கு முகம்கொடுத்தார்.

கடந்த ஆண்டு நவம்பர் 2 ஆம் திகதி இடம்பெற்றதாக குற்றம்சாட்டப்பட்ட இந்த சம்பவத்தில் 32 வயதான குணதிலக்க கிழக்கு சிட்னியில் குற்றம்சாட்டப்பட்ட பெண்ணின் வீட்டில் வைத்து ஆணுறை அணிவதற்கு மறுத்ததாகக் கூறப்பட்டது.

டி20 உலகக் கிண்ணத்தில் பங்கேற்கச் சென்ற இலங்கை அணியில் இடம்பெற்றிருந்த குணதிலக்க நவம்பர் 6 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். எனினும் தன்மீதான அனைத்து குற்றச்சாட்டுகளில் இருந்தும் அவர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில் எஸ்.எஸ்.சி அணிக்காக ஆடும் குணதிலக்க நுகேகொடை விளையாட்டுக் கழகத்திற்கு எதிராக இன்று மொரட்டுவை டி சொய்சா மைதானத்தில் நடைபெறும் போட்டியில் பங்கேற்கவுள்ளார்.

குணதிலக்க மீது இலங்கை கிரிக்கெட் சபை விதித்த தடை சில மாதங்களுக்கு முன்னர் நீக்கப்பட்ட நிலையில் எஸ்.எஸ்.சி கழகம் விதித்த தடையும் நீக்கப்பட்டிருப்பதால் அவருக்கு கழக மட்டப் போட்டிகளில் ஆட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தனுஷ்க கடைசியாக 2020 ஆம் ஆண்டிலேயே எஸ்.எஸ்.சி அணிக்கு ஆடி இருந்தார்.

# கவாஜாவின் கறுப்பு பட்டிக்கு எதிராக ஐ.சி.சி. குற்றச்சாட்டு

## எதிராக மேன்முறையீடு செய்ய முடிவு



பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின்போது காசாவில் உள்ள பொதுமக்களுக்கு ஆதரவாக கறுப்புப் பட்டியை அணிந்த அவுஸ்திரேலிய ஆரம்ப துடுப்பாட்ட வீரர் உஸ்மான் கவாஜா மீது சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் (ஐ.சி.சி.) குற்றம் சுமத்தியுள்ளது. எனினும் அந்த குற்றச்சாட்டு எதிராக மேன்முறையீடு செய்ய அவர் தீர்மானித்துள்ளார்.

பேர்த் டெஸ்ட் போட்டியில் "அனைத்து உயிர்களும் சமம்" மற்றும் "சுதந்திரம் ஒரு மனித உரிமை" என்ற வாசகங்களைக் கொண்ட பாதணியை அணிவதற்கு 37 வயது கவாஜா திட்டமிட்டபோதும் அதனை அவர் கடைசி நேரத்தில் கைவிட்டார். பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக அந்த பாதணிகளை அணிந்து பயிற்சியில் ஈடுபட்டிருந்தார்.

இந்நிலையில் அவர் ஆடை மற்றும் உபகரணங்கள் ஒழுங்குமுறையை மீறி இருப்பதாக ஐ.சி.சி தீர்மானித்துள்ளது. எனினும் எதிர்வரும் டிசம்பர் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஆட கவாஜாவுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அவர் மீதும் கைப் பட்டியை அணிவது அல்லது ஐ.சி.சி மற்றும் அவுஸ்திரேலிய கிரிக்கெட்டின் அனுமதி இன்றி பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக ஆடுகளத்தில் செய்தியை பதிவு செய்தால் தண்டனைகளுக்கு முகம்கொடுப்பார்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி ஆரம்பித்த இஸ்ரேல் மற்றும் காசா போரில் இஸ்ரேலின் கடுமையான தாக்குதல்களில் 20,000க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஐ.சி.சி விதிகளின்படி, சர்வதேச போட்டிகளின்போது வீரர்கள் அரசியல், சமய அல்லது இன ரீதியான காரணங்களை காட்டி செய்திகளை வெளிப்படுத்த முடியாது.

முஸ்லிம் ஒருவரான கவாஜா, தனது செய்தி "மனிதாபிமான முறையீடு" என்றும் ஓர் அரசியல் செய்தியல்ல என்றும் குறிப்பிட்டுள்ளார்.

"தனிப்பட்ட செய்திக்கு தேவையான ஒழுங்கு விதியின்படி காட்சிப்படுத்துவதற்கு அவுஸ்திரேலிய கிரிக்கெட் மற்றும் ஐ.சி.சியின் முன் அனுமதியை பெறாது பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் உஸ்மான் தனிப்பட்ட செய்தி ஒன்றை வெளிப்படுத்தியுள்ளார்" என்று ஐ.சி.சி பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

"இது ஒரு 'மற்ற மீறல்' வகையின் கீழ் ஒரு மீறலாகும் என்பதோடு முதல் குற்றத்திற்கான அனுமதி ஒரு கண்டனமாக அமையும்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பலஸ்தீன கொடியின் நிறங்களான சிவப்பு, பச்சை மற்றும் கறுப்பு நிறத்தில் எழுதப்பட்ட பாதணிகளை அணியக் கூடாது என்று கூறியபோது அந்த முடிவுக்கு எதிராக போராடியதாக கவாஜா குறிப்பிட்டார்.

சமூக ஊடகத்தில் அவர் பதிவிட்ட வீடியோ செய்தியில், காசாவில் உள்ள பொதுமக்களுக்கான தமது ஆதரவை மீண்டும் ஒருமுறை வலியுறுத்தினார்.

"மைதானத்தில் எனது பாதணியை அணிய முடியாது என்று ஐ.சி.சி கூறியது. ஏனென்றால் அதன் வழிகாட்டலின் கீழ் அது அரசியல் செய்தி ஒன்றாக இருக்கிறது என்று நம்புவதாக அது கூறியது. அதனை நான் நம்பவில்லை.

நான் அவர்களது நிலைப்பாடு மற்றும் முடிவை மதித்தபோதும் நான் அதற்கு எதிராக போராடி அனுமதி பெற முயற்சித்தேன்" என்று கவாஜா குறிப்பிட்டுள்ளார்.

தனிப்பட்ட கருத்துகளை வெளியிடும் எமது வீரர்களின் உரிமைக்கு ஆதரவு அளிப்பதாக குறிப்பிட்ட அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை, ஆனால் ஐ.சி.சி விதிகளை அவர்கள் கடைப்பிடிப்பார்கள் என்று எதிர்பார்ப்பதாக தெரிவித்தது.

2014இல் இங்கிலாந்து சகலதுறை வீரர் மொயீன் அலி இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியின்போது காசாவுக்கு ஆதரவை வெளியிட்டு கைப்பட்டி ஒன்றை அணிவதற்கு எதிராக எச்சரிக்கை விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் கறுப்புப் பட்டி அணிந்ததற்காக ஐ.சி.சி சுமத்தி இருக்கும் குற்றச்சாட்டுக்கு எதிராக முறையீடு செய்யப்போவதாக குறிப்பிட்டிருக்கும் கவாஜா, அந்த கறுப்புப் பட்டி ஒரு "தனிப்பட்ட இறங்கல் செய்தி" என்று தெரிவித்துள்ளார். எனினும் அடுத்த டெஸ்ட் போட்டியில் அதனை மீண்டும் அணிய எதிர்பார்க்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மாஸ்டர் மெய்வல்லுனர் போட்டியில் புத்தளம் சகோதரர்களுக்கு தங்கம்

**கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்**



மாத்தறையில் இடம்பெற்ற இவ்வருடத்திற்கான சர்வதேச மாஸ்டர் மெய்வல்லுனர் திறந்த போட்டிகளில் புத்தளம் நகரைச் சேர்ந்த உடன்பிறந்த சகோதரர்கள் இருவர் இரண்டு தங்கப் பதக்கங்களையும் ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் வென்றனர்.

இந்தப் போட்டி மாத்தறை–கொடவில்ல விளையாட்டு மைதானத்தில் அண்மையில் (16) நடைபெற்றது.

இதில் உடற்கல்வி ஆசிரியர்களான எம்.எப்.எம் ஹுமாயூன், உயரம் பாய்தல் போட்டியில் தங்கப்பதக்கத்தையும், எம்.எப்.எம் துபையில் நீளம் பாய்தல் போட்டியில் தங்கப் பதக்கத்தையும், 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டனர்.

இவர்கள் இருவரும் கற்பிட்டி கோட்டக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட அல்–அக்ஷா தேசிய பாடசாலையில் உடற்கல்வி ஆசிரியர்களாக கடமையாற்றி வருவதுடன், புத்தளம் பாத்திமா கல்லூரிக்கும் இணைப்பு செய்யப்பட்டுள்ளனர்.



இலங்கை சதுரங்க சங்கத்தின் அனுசரணையில் யாழ்ப்பாணம் மாவட்ட சதுரங்க சங்கம் யாழ்ப்பாணம் செல்வா பலஸில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சர்வதேச சதுரங்க போட்டியில் சம்பியன் மற்றும் இரண்டாம் இடத்தை பிடித்த யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்களான முறையே அ. அயோதிசன் மற்றும் ச. சிவசரணிகை ஆகியோரை காணலாம். (படம்: மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# தென்னாபிரிக்காவுக்கு எதிராக இந்தியாவுக்கு தொடர் வெற்றி



சன்ஜு சம்சனின் கன்னி சதத்தின் உதவியோடு தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் சர்வதேச போட்டியில் 78 ஓட்டங்களால் வெற்றியீட்டிய இந்திய அணி தொடரை 2–1 என கைப்பற்றியது.

பார்ல் நகரின் போலன்ட் பார்க் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட கே.எல். ராகுல் தலைமையிலான இந்திய அணிக்கு முதல் வரிசையில் வந்த சன்ஜு சம்சன் கைகொடுத்தார்.

ஒரு முனையில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய அவர் 114 பந்துகளில் 6 பௌண்டரிகள் மற்றும் 3 சிக்ஸர்களுடன் 108 ஓட்டங்களை பெற்றார். மத்திய வரிசையில் திலக் வர்மா அரைச் சதம் ஒன்றை குவித்தார். இதன்மூலம் இந்திய அணி 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 296 ஓட்டங்களை பெற்றது.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு ஆரம்ப வீரர் டோனி டி சேர்சி 81 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தபோதும் வேறு எந்த வீரரும் கைகொடுக்கவில்லை. இதனால் அந்த அணி 45.5 ஓவர்களில் 218 ஓட்டங்களுக்கே சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

சிறப்பாக பந்துவீசிய அர்ஷீப் சிங் 9 ஓவர்களில் 30 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுகளை பதம்பார்த்ததோடு அவேஷ் கான் மற்றும் பந்துவீச்சிலும் சோபித்த வொஷிங்டன் சுந்தர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

### இங்கிலாந்துக்கு எதிராக

# டி20 தொடரையும் வென்றது மேற்கிந்திய தீவுகள் அணி



இங்கிலாந்துக்கு எதிரான ஐந்தாவது மற்றும் கடைசி டி20 போட்டியில் 4 விக்கெட்டுகளால் வெற்றியீட்டிய மேற்கிந்திய தீவுகள் அணி தொடரை 3–2 என கைப்பற்றியது.

டிரினிடாட், பிரையன் லாரா மைதானத்தில் நேற்று முன்தினம் (21) நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இங்கிலாந்து அணி 19.3 ஓவர்களில் 132 ஓட்டங்களுக்கே சுருண்டது. ஆரம்ப வீரர் பில் சோல்ட் 22 பந்துகளில் பெற்ற 38 ஓட்டங்களும் அதிக பட்சமாகும்.

இந்நிலையில் பதிலெடுத்தாட வந்த மேற்கிந்திய அணி வெற்றி இலக்கை எட்டுவதற்கு கடைசி ஓவர் வரை போராட வேண்டி இருந்தது. அந்த அணி 19.2 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 133 ஓட்டங்களை எட்டியது. மத்திய வரிசையில் சாய் ஹோப் கடைசி வரை களத்தில் இருந்து 43 பந்துகளில் ஆட்டமிழக்காது 43 ஓட்டங்களை பெற்றார்.

ஏற்கனவே மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இங்கிலாந்து அணி இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடரையும் 2–1 என இழந்தது.

இந்தியாவில் அண்மையில் நடந்து முடிந்த ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டியில் நடப்புச் சம்பியனாக களமிங்கிய இங்கிலாந்து அணி ஆரம்பச் சுற்றுடனேயே வெளியேறியது. எனினும் மேற்கிந்திய தீவுகள் அணி உலகக் கிண்ணத்தில் ஆடவே தகுதி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# 7 புதுமுக வீரர்களுடன் ஆஸி. செல்லும் மேற்கிந்திய தீவுகள்



அவுஸ்திரேலிய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் விளையாடும் மேற்கிந்திய தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்திய தீவுகள் அணி அடுத்தாண்டு ஜனவரி மாதம் அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் மற்றும் தலா 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் டி20 தொடர்களில் விளையாடவுள்ளது.

முதலில் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ள நிலையில், இத்தொடருக்கான கிரேக் பிராத்வைட் தலைமையிலான 15 பேர் கொண்ட மேற்கிந்திய தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த டெஸ்ட் தொடருக்கான மேற்கிந்திய தீவுகள் அணியில் இருந்து அனுபவ வீரர்களான ஜேசன் ஹோல்டர் மற்றும் கைய்ல் மேயர்ஸ் ஆகிய இருவரும் விலகியுள்ளனர். அத்துடன், வேகப்பந்து வீச்சாளர் அல்ஸாரி ஜோசப் உப தலைவராக பெயரிடப்பட்டுள்ளார். மறுபுறம் முன்னணி வீரர்கள் காயம் காரணமாக விலகியுள்ளதால் 7 புதுமுக வீரர்களை இணைக்கப்பட்டுள்ளனர். இதன்படி, ஸச்சரி மெக்காஸ்கி, விக்கெட் காப்பாளர் டெவின் இம்லாச், சகலதுறை வீரர்களான ஜஸ்டின் கிரீவ்ஸ், கவேம் ஹாட்ஜ் மற்றும் கெவின் சின்க்ளேர், வேகப்பந்து வீச்சாளர்களான அகீம் ஜோர்டான் மற்றும் ஷமர் ஜோசப் என புதிய ஏழு வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.

மேற்கிந்திய தீவுகள் அணி ஜனவரி 10–13ஆம் திகதி வரை அவுஸ்திரேலிய பதினொருவர் அணியுடன் பயிற்சிப் போட்டியில் மோதுகிறது. அதனைத் தொடர்ந்து முதல் டெஸ்ட் போட்டி ஜனவரி 17ஆம் திகதி அடிலெய்டில் ஆரம்பமாகவுள்ளதுடன், 2ஆவது போட்டி பிரிஸ்பனில் பகலிரவு டெஸ்ட் போட்டியாக நடைபெறுகிறது.



# நடுவரை மிரட்டிய கரனுக்கு நான்கு போட்டிகளில் தடை

நடுவரை மிரட்டிய குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதை அடுத்து இங்கிலாந்து மற்றும் சிட்னி சிக்ஸர்ஸ் அணிகளின் சகலதுறை வீரர் டொம் கரனுக்கு அவுஸ்திரேலிய பிக் பாஷ் லீக் தொடரில் நான்கு ஆட்டங்களில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளார்.

லோன்சன்டனில் ஹோர்பாட் ஹரிகன் அணிக்கு எதிராக கடந்த டிசம்பர் 11 ஆம் திகதி நடைபெற்ற சம்பவத்திற்காகவே கரனுக்கு இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

போட்டிக்கு முன்னரான பயிற்சியின்போது கரன், நடுவர் ஒருவருடன் முரண்பட்டதை அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை கண்டறிந்துள்ளது.

எனினும் இதன்போது கரன் எந்த குற்றமும் இழைக்கவில்லை என்று குறிப்பிட்டிருக்கும் அவரது அணி இந்த முடிவுக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்போவதாக தெரிவித்துள்ளது.

போட்டிக்கு முன்னர் ஆடுகளத்தின் மேற்பார்வைக்கு பொறுப்பான நான்காவது நடுவர், ஆடுகளத்தை மிதிக்க வேண்டாம் என்று கரனை கேட்டுக்கொண்டார். அதன்பின்னர் கரன் குறுக்காக நின்ற நடுவரை மோத வருவது போல் ஓடிவந்து விலகிச் சென்றார்.

இது அவுஸ்திரேலிய கிரிக்கெட் விதியில் நடுவர் அல்லது போட்டி மத்தியஸ்தரை மிரட்டுவது அல்லது மிரட்ட முயற்சிப்பதாக கருதப்பட்டுள்ளது.

இங்கிலாந்து அணிக்காக இதுவரை 2 டெஸ்ட், 28 ஒருநாள் மற்றும் 30 டி20 சர்வதேச போட்டிகளில் ஆடி இருக்கும் டொம் கரன் 2021 ஜூன் மாதத்திற்குப் பின் இங்கிலாந்து அணியில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.